

# கோவை இளஞ்சேரன்

# கவிதைகள்





★ **இவன்** திருவள்ளுவராண்டு 1954 மார்கழி, 20ஆம் நாள் [4-1-1923] பிறந்தான். இராமநாதபுர மாவட்டத்துக் கல்லல் இவன் பிறந்த ஊர்.

★ ஆத்திசூடி உரைகாரர் **கோ. வைத்தியலிங்கனார்** இவனது தந்தையார். மெய்கண்டசிவன் என்ற இயற்பெயரினன்; கோவை. இளஞ்சேரன் என்னும் புனைபெயரையே வழக்காகப் பெற்றவன்.

★ காரைக்குடியிலும், நடாமங்கலத்திலும் துவக்கக் கல்வி பெற்றவன்; மன்னார்குடி நாட்டுயர்நிலைப் பள்ளியில் பயின்றவன்; திருவையாறு அரசர் கல்லூரியில் பயின்று தமிழ் வித்துவான் பட்டம் பெற்றவன்.

[ வரலாற்றின் மறு பகுதி
அட்டையின் மறு மடிப்பில்
தொடரும் ]

# கோவை இளஞ்சேரன்

# கவிதைகள்

[ கவிஞர் கோவை. இளஞ்சேரனது நாற்பது
தலைப்புக் கவிதைகளின் தொகுப்பு. ]

**கலைக்குடில் வெளியீடு.**

நாகப்பட்டினம்.

உரிமை ஆசிரியர்க்கு.

முதற் பதிப்பு.

வெளியீடு: திருவள்ளுவராண்டு 1994
புரட்டாசி, 20. [6-10-1963]

விலை ரூ. 3-00.

கலிக்கா கட்டு ரூ. 4-00.

அச்சு:
லை அச்சகம்,
டினம்.

# பதிப்புரை :

உணர்ச்சிக்கு, அறிவு மெருகோடு கொடுக்கும் சொல்லுருவமே கவிதை. மலரும் கவிதையின் மணத்தை உடனுக்குடன் உலகோர் சுவைக்க வேண்டும். நல்ல கவிதை அதைச் சுவைத்தோர் உள்ளத்தின் ஒரு மூலையில் பதிந்து கிடக்கும். இலக்கிய நினைவு எழும்போது அது தலைநீட்டிக் கொண்டும் இருக்கும். ஆண்டுகள் கடந்தாலும் அக் கவிதையைக் காணவேண்டும் என்ற எண்ணம் எழும். அதுபோது கவிதைத் தொகுப்பு வெளிவர வேண்டும்.

இக் கவிதைத் தொகுப்பு அவ்வகையில் வெளிவருகிறது. கவிஞர் கோவை. இளஞ்சேரனின் கவிதைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வாழ்வியல் அடிப்படை கொண்டவை. முத்தும், வித்தும் போன்று கருத்துள்ளவை. பாலும், பாகும் போலும் எளியவை, சுவையும், நுங்குமாய்ச் சுவைப்பவை. அவை இதழ்களில் வெளிவந்தபோது சுவைத்தோர் பலர்; பாராட்டியோர் பலர்; நாளடைவில் அவர்தம் உவமைகளையும், கருத்துக்களையும் தம்மதாகக் கையாண்டோர் சிலர்; ஒருங்கு கூட்டிக் காண அவாக்கொண்டோர் சிலர். யாவர்க்கும் நிறைவாக இத் தொகுப்பு வெளிவருகிறது.

இக் கவிதைத் தொகுப்பு தனிச் சிறப்புகளைக் கொண்டது. அகவியல், புறவியல், பொதுவியல் எனும் பகுப்பு அச்சிறப்புகளில் ஒன்று. அவற்றிற்கேற்பக் குறிப்பு காட்டும் படங்களைப் பெற்றுள்ளமை மற்றொன்று. வெண்டாமரை இதழ் அன்ன தாளில் கருமணி பதித்தமை போன்ற அச்சமைப்பு வேறொன்று. எளிதாகப் புரட்டிச் செல்லுமாறு அமைக்கப்பட்ட அமைப்பு அடுத்த ஒன்று. பல்வகை யாப்புகளில் கவிதை உருவாகியுள்ளமை இன்னொன்று. யாப்பை இறுதியில் குறித்திருப்பது மேலொன்று. யாப்பமைதி சிதையாத

சந்தி அமைப்பு சார்பொன்று. எக் கவிதையாயினும் ஒரு நற் கருத்தைக் குறிக் கொண்டிருப்பது சிறப்பொன்று. சொல்லணி, பொருளணி, சந்தநடை கொண்டிலங்குவது நன்றென்று.

யாவற்றிற்கும் மணிமுடி போன்ற சிறப்பு ஒவ்வொரு தலைப்பும் ஒவ்வொரு மதிப்புக் கருத்துரையைப் பெற்றிருப்பது. அம் மதிப்புக் கருத்துரைகளின் மூலம் பேராசிரியப் பெருமக்கள் கவிதை மெருகுக்கு ஒளியூட்டியுளர்; கவிஞர் பெருமக்கள் பொலிவேற்றியுளர்; சொல்வன்மைச் செம்மல்கள் புகழ் காட்டியுளர்; எழுத்தாளப் பெருந்தகையினர் எழில் படைத்துளர். கவிதைபாலும், கவிஞர்பாலும் பேரன்பு கொண்டு இப்பெருந்தகவினர் மதிப்புக் கருத்துரை வழங்கிச் சிறப்பித்தமைக்கு உள்ளம் நிறைந்த நன்றியைத் தெரிவித்து மகிழ்கின்றோம்.

இத்தொகுப்பு வெளிவரப் பேரார்வங் கொண்டு தூண்டி உதவியோர் பலர். அவர்களும், நேர்நின்றுதவிய டாக்டர். ப. மு. சொக்கலிங்கனுர், திருவாளர்கள் ஆ. நாராயணசாமி அவர்கள், அர. சந்தானகோபாலகிருட்டிணன் அவர்கள், புலவர். ஆ. மகிழ்னன் அவர்கள், புலவர். அ. அறிவொளி அவர்கள், சிவாஜி பேப்பர் ஸ்டோர்சு கே. எம். முத்தழகு அவர்கள் ஆகியோர் எம் உளமார்ந்த நன்றியை ஏற்பார்கள்.


மறைமலை அச்சகத்தார் திரு. சாமி அவர்கள் மனமகிழ்வுடன் இப்பணியை ஏற்று நிறைவாகச் செய்தார்கள். ஓவியக் கலைஞர் திரு. பா. நடராசனவர்கள் வேண்டியாங்கு மேலட்டையை உருவாக்கினர்கள். நன்றி உரித்தாகுக.

தொகுப்பு உங்கள் கையில். கலைப்பெட்டகத்தைத் தந்திருக்கிறோம் என்ற எங்கள் நம்பிக்கை நற்சான்று பெறும்.

வணக்கம்.

*சானகி இளஞ்சேரன்.*

## உள்ளுறை இயல்கள்:




கோவை. இளஞ்சேரன்
**கவிதைகள்.**

# அன்புக் காணிக்கை :

நறுந்தமிழ் தனக்கு நன்கொடை ஊற்று;
தெறுநோ யினர்க்குத் தென்றற் காற்று;
கமழ்தமிழ், சைவம் கண்ணெனக் காண்பவர்;
தமிழ்ப்புல மைத்தேன் தழைக்கும் மலரினர்;
காட்சிக் கெளியர்; கனிச்சுவை மொழியர்;
மாட்சிமை மனையொடு, மக்களும் நிரப்பினர்;
எனக்குத் தோன்றும் ஏந்தலாம் துணைவர்;
மனக்கினி யனபல மகிழ்ச்சியாய்ப் புனைவர்;
ஈகைசேர் இனியர், நாகைவாழ் பெரியர்
மருத்துவர் ப.மு.சொக் கலிங்கனார்க் கின்னூல்
அருத்தியோ டணியாய் ஆக்குவன்; அணிவர்.
பாரித் தென்னுளம் பூரித் தொளிருமே.

*கோவை. இளஞ்சேரன்.*

மொழி ஒரு கருவியே. உள்ளத்துக்கு உள்ளத்தை அறிமுகப்படுத்துவதால் அக்கருவி தனித்தன்மை வாய்ந்தது. தமிழ் மொழியோ தெளிவோடும், இனிமையோடும், தூய்மையோடும் அப்பணியைச் செய்வது. அதனால் தமிழ் இறைமைத் தன்மையது. அது பழுதுபடல் இறைமைத் தன்மைக்கே பழுதாகும். பழுதின்றிக் காக்க நா வாழ்த்துவதில் பொருள் உண்டு.

# வாழ்த்தாய் நறுநாவே!

*'வாழ்த்துதும் வாழ்த்தி வணங்குதும் நந்தமிழ்,*
*வாழ்த்துதும் வாழ்த்தி வளர்க்குதும்' என்றுநீ*
*வாழ்த்தாய் நறுநாவே! வாழ்ந்தநம் தாய்மொழி*
*வாழ்வியல் சீர்மொழி 'வான்புகழ்ச் சீரொடு*
*வாழ்'கென வாழ்த்திடு வாய்!*

*கீழ்கதிர்ப் பேரொளி, ஆழ்கடல் தேர்வளம்,*
*வீழ்கனித் தேன்சுவை, வாள்தரும் கூர்திறம்,*
*யாழ்தரும் சீரிசை யாவுமாம் தீந்தமிழ்*
*'வாழ்வகை ஈ'கென வாழ்த்தாய்! இடரெலாம்*
*ஆழ்கென வீழ்த்திட லான்.*


நந்தமிழ், பைந்தமிழ், நற்றமி ழாமென்று
வந்தனை செய்வதற் கந்நாள் தீந்தமிழ்;
நொந்து பிழைமலிந் திந்நாள் நைந்திடும்
செந்தமிழ் சீர்பெறச் செந்திரு வாக்கத்தைத்
தந்துநீ வாழ்த்துக தான்!

பொருளுக் கிலக்கணம் பெற்ற மொழிச்சொல்
அருளும் பொருளோ அகமாய்ப் புறமாய்த்
தெருளினர் என்னின், தெளிதமிழ்ச் சொல்லில்
அரும்அக வாழ்வோ டணிபுற வாழ்வே
கருதிநீ வாழ்த்திசீர் காண்.

தாய்மொழித் தேன்சுவை தான்சொலி வாழ்த்திடத்
தூய்மனம் நேர்பெறும்; தூய்மனம் தேர்சொலில்
வாய்மொழி சார்வுறும்; வாழ்வியல் சீர்பெறும்;
தோய்வினை வான்புகழ் தோய்ந்திடும், ஆதலின்
சேய்,நிறை வாழ்த்தது சேர்.

[ஐந்தடிப்
பஃறொடை வெண்பா.]

# அக இயல்



கோவை. இளஞ்சேரன்

**கவிதைகள்.**

# முத்துக்கள் :

★

காதல் பேசிற்று.

அவளுக்கென்ன ?

புரட்சி தூவிச் சென்றாள்.

முறையோ சொல்லாய் !

புளித்த காதல்.

இளமையெனும் பொல்லாய் !

கண்ணல்ல !

அமுதமொரு சுவையோ ?

அந்த ஒலி !

செந்தமிழ்க்காவலர்
*டாக்டர். அ. சிதம்பரநாதனூர்*
M. A., Ph. D., M. L. C.
[தலைமைப் பேராசிரியர், ஆங்கில-தமிழ்
அகராதித்துறை, சென்னைப் பல்கலைக் கழகம்.]
வழங்கிய
**மதிப்புக் கருத்துரை :**

தலைவி தோழியரிடையே நிகழும் உரையாடல் போல் அமைந்த பாடல் வழியாகக் கவிஞர் தலைவியின் உறுதியினையும், பெற்றோரின் அன்பினையும் அழகுறப் புலப்படுத்தி யுள்ளார். 'தந்தையின் திகைப்பை நகைப்பாக்கு' என்பது போல வரும் பகுதிகள் சுவைத்து இன்புறத் தக்கவை.

[ஒ-ம்.] அ. சிதம்பரநாதன்.

# காதல் பேசிற்று.

தலைவி :

*தேடிவந்த எனதருமைச் செல்லத் தோழி !*
*தேம்புகின்ற பெற்றோர்க்குச் சென்று ரைப்பாய்:*
*'ஓடிவிட்ட நும்பெண்ணுள் ஆளன் தன்னே*
*டோங்குகின்ருள் காதல்தரும் இன்பத்' தென்றே.*

தோழி :

*நாடிதளர்ந் தழுகின்ருர் உனைப்பி ரிந்தே*
*நானென்ன நவில்வனடி அவர்க்கு மாற்றம் ?*

தலைவி :

*போமடிபோ 'அவளிங்கு வந்தால் அன்னாள்*
*பொன்நாடி புகைந்தேபோம்' என்றே கூறாய் !*

தோழி :

*'சிற்றிடையில் ஆடைசுற்றி மார்பில் கச்சுச்*
*சீரமைத்தேன், எழில்தந்தாள்; மகிழ்ந்தேன்; அந்த*
*ஒற்றைமகள் பிரிந்தனளே' என்றே கூவி*
*ஒப்பாரி வைப்பவட்கு நானென் சொல்வேன் ?*

தலைவி :

*'சிற்றிடையின் ஆடைதனில் கச்சில் போட்ட*
*சுருக்கவிழ்க்க அத்தானைச் சூழ்ந்து சென்று,*
*வெற்றிடையில் விளையாடி மகிழ்ந்தாள்' என்று*
*விளம்பியவள் துயர்தீர்க்க விரைந்து போமடி !*

தோழி :

*'தாங்குதற்குத் தோழிநிற்க, இதுதான் தேவை*
*'தா'வென்றால் தரநானே துடித்து நிற்கத்*
*தீங்குதந்து போயினளே' என்றே ஆவி*
*திகைக்கின்ற தந்தைநிலை தீர்க்கப் போமோ ?*

தலைவி :

தேங்குழலைக் கேட்கின்ற பருவ மன்று;
தேவைகொண்ட இன்பமதோ அத்தா னன்றித்
தாங்குதந்தைக் கேலாத தன்மை சாற்றித்
தாழ்திகைப்பை நகைப்பாக்கத் திரும்பிப் போடி!

தோழி :

உனைப்பிரிந்து துணையறியா எனைப்பி ரிந்தே
உளம்வாடச் செய்தனையே நானென் செய்வேன்?

தலைவி :

எனைப்போல நீ ொரு துணையை நாடி
எழில்குவிச் ும் இன்பத்தை எய்தப் போடி!

தோழி :

நனையாமல் நரியதனை நீராட் டல்போல்
நயமான மாற்றமெலாம் நவின்றாய், நன்றே;
'புணைநீயே வாழ்க்கைதனக்' கென்றுன் மாமன்
புரிந்துவரும் செயலதனைப் புகன்றால் சோர்வாய்.

'என்னருமைக் கன்னிதனை இட்டுச் சென்ற
எத்தனைநான் சாடிடுவேன்' என்றே கூறித்

*தின்னவரும் புலிபோலத் திரியும் அந்தத்*
*தீயனுக்குத் தடையென்ன தீர்ப்பேன் சொல்வாய் ?*

தலைவி :

*'மின்னுகின்ற கட்டாரி மின்னுள் கொண்டாள்;*
*மருட்டியுனை வெருட்டு'மென அவற்குக் கூறி,*
*'கன்னியவள் பேசவில்லை அன்னுள் கொண்ட*
*காதல்தான் பேசிற்'றென் ரேடிச் சொல்வாய் !*

[உரையாடல் துறையிலமைந்த
எண்சீர் ஆசிரிய விருத்தங்கள்.]

**திரு. கி. வா. ஜகந்நாதன் M.A.**
[ஆசிரியர், "கலைமகள்", சென்னை.]

அவர்கள் வழங்கிய

மதிப்புக் கருத்துரை:

இனிய காதல் உளத்தோங்க
    எண்ணம் நிறைவு பெறலின்றிக்
கனியை, மலரைக் குழந்தையினைக்
    காளை நுகரும் அதுகண்டான்.

இதனை இனிய கவியாக்கி
    எழுமூ விருவின் வடிவத்தில்
மதுவின் சுவையும் பழச்சுவையும்
    மலியச் சொல்லும் நுனியமையப்
புதிய படைப்பைத் தந்துள்ளான்;
    புலமைத் திறத்தால் தமிழென்னும்
நிதியைப் போற்றும் கோவைஇளஞ்
    சேரன் எனும்பேர் நிறைந்தவனே.

[ஒ-ம்.] கி. வா. ஜகந்நாதன்.

# அவளுக்கென்ன?

*அன்றுநம் கொல்லையிலே கனிந்து வீழ்ந்த*
*அழகமைந்த மாங்கனிகள் இரண்டி லொன்றைத்*
*திண்ணையில்நீ நிற்குங்கால் கொணர்ந்து தந்தேன்;*
*தேனூறுங் கனியதைநீ தடவிப் பார்த்தே*

உண்ணுவதற் குதடழுத்திக் கடிக்கும் போதில்
உணவிழுங்க முன்வீட்டில் உற்றுப் பார்த்த
கண்ணழகி எதற்கண்ணு பெருமூச் சிட்டாள் ?
கனியதனை நீசுவைத்தால் அவளுக் கென்ன ?

'குதர்க்க'மாய்க் கேட்கின்றேன் என்றே எண்ணிக்
குட்டுதற்கு வாராதே; அன்றோர் மாலை
புதர்க்குள்ளே மலர்ந்திருந்த மலரில் ஒன்றைப்
பறித்தோடி வந்துனக்குக் கொடுத்து நின்றேன்;
மதர்க்கின்ற மணமதைநீ மோந்து நிற்க,
மருட்சிகொண் டெதிர்வீட்டில் நின்ற பெண்ணுள்
எதற்கண்ணு இதழதுக்கிப் பெருமூச் சிட்டாள் ?
எழில்மலரை நீமோந்தால் அவளுக் கென்ன ?

தலைசீவி உடைதிருத்திக் கல்லூ ரிக்குத்
தக்கதொரு போதினில்நீ கிளம்பும் போது
தலையசைத்துக் கைவிரித்துத் தாழ்வா ரத்தில்
தவழ்ந்துவந்த தங்கையைநீ அணைத்துத் தூக்கி

கவிதைகள்.

அலையெனவே அடுக்கடுக்காய் முத்த மிட்டாய்;
அதைநோக்கி எதிர்வீட்டில் நின்ற கள்ளி
தலைகவிழ்த்தே உடல்விம்ம ஏன்மூச் சிட்டாள் ?
தங்கையைநீ முத்தமிட்டால் அவளுக் கென்ன ?

[எண்சீர் ஆசிரிய
விருத்தங்கள். ]

கோவை. இளஞ்சேரன்

***திரு. "பகீரதன்" அவர்கள்***

[ஆசிரியர், "கங்கை", சென்னை.]

வழங்கிய

***மதிப்புக் கருத்துரை :***

"கற்பு நிலையென்று சொல்லவந்தார் - இரு
கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்"
—என்றார் பாரதியார்.

அதற்கு இன்னும் ஒருபடி மேலே போய், கவிஞர் இளஞ்சேரன் இந்தப் புரட்சிக் கவிதையில் மக்களின் அறிவுக் கண்களைத் திறந்து விடுகிறார்.

[ஒ-ம்.] பகீரதன்.

# புரட்சி தூவிச் சென்றாள்.

*துள்ளிக் குதித்தோடும் - மானும்*
*தோற்றிடும் பார்வையினாள்;*
*தெள்ளிய தென்றலையே - உடலில்*
*தெளிக்கும் பொன்னியினை,*
*அள்ளி யணைக்குமின்பம் - மணத்தால்*
*அமையப் பெற்றகுப்பன்*
*வள்ளி யெனுங்கன்னியை - வஞ்சமாய்*
*வரித்து நாடிநின்றான்.*

முல்லை மலர்பறிக்க - வள்ளி
முத்து நகைவிரித்தே
கொல்லையில் வந்துநின்றாள்; - குப்பன்
கொத்திடப் பாய்ந்துவந்தான்;
சொல்லைச் சொரிந்தவுடன் - அன்னார்
சொக்கினர் இன்பத்தினில்;
பல்லை உதட்டமுத்தி - பொன்னி
பார்த்துப் பதறிநின்றாள்!

தன்னை மணந்தவனே - வேறு
தையலைக் கூடுகின்ற
'சின்ன' அறிவினையே - எண்ணிச்
சிந்தை யுடைந்தவளைத்
தின்றுச் சுவைமுடித்தே - அங்கு
திரும்புங் குப்பன்கண்டே
''என்னேடி விம்முகின்றாய்? - இங்கே
ஏனடி வந்த''தென்றான்.

கோவை. இளஞ்சேரன்

''பொன்னுடல் கூடுதற்கே - என்னைப்
'பொன்னி,நீ வாடி'யென்றே
சொன்னவர் வந்தாரிலை; - அத்தான்,
சென்றிதோ மீளுகின்றேன்;
புன்னை நிழலமர்வீர்'' - என்றே
புரட்சி தூவி(ச்)சென்றாள்;
கண்ணினை வேல்குடைய - குப்பன்
கலங்கிச் சாம்பிவிட்டான்.

[ இடைமாச்சீர் விட்டிசைக்கும்
நெடிலடி ஆசிரிய விருத்தங்கள்.]

கவிதைகள்.

***டாக்டர்.***
***மா. இராசமாணிக்கனார்***
M.A.,L.T., M.O.L., Ph.D.

வழங்கிய

**மதிப்புக் கருத்துரை :**

காதலனது அணைப்பில் – தழுவலில் – பேச்சில் கலக்கக் காதலியின் உள்ளமும், உடலும் துடிக்கின்றன. ஆனால், நாணம் தடுக்கின்றது. 'இங்ஙனம் தடுத்தல் முறையோ' என்று காதலி நாணத்தை முன்னிலைப்படுத்திக் கூறுதல் படிக்கப் படிக்க இன்பத்தைத் தருகின்றது.

[ஒ-ம்.] மா. இராசமாணிக்கனார்.

# முறையோ சொல்லாய்!

*தித்திக்கும் சுவைத்தேனை உதட்டில் ஊற்றித்*
*தென்றலினை உடல்முழுதும் தேங்க விட்டுக்*
*குத்தகையாய் இன்பமதைக் குவிக்கும் என்றன்*
*குன்றன்னார் தோள்களையான் காணு முன்னர்*
*'அத்தா'னென் றோடிப்போய் அணைத்துக் கொள்ள*
*அமைத்திருந்த ஆர்வமதை அவர்க்கு முன்னே*
*சொத்தையாய்ச் சிதைத்தனையே நாண மே,நீ*
*சுவைக்கூட்டை உடைத்தெறிதல் முறையோ சொல்லாய்!*

கோவை. இளஞ்சேரன்

பொங்கிவரும் புதுவெள்ளப் பேற்றைத் தாவிப்
புகுந்தணையுங் கெண்டையென அவரைக் கிட்டித்
தங்கஉடற் புறத்தையொரு கைய ளாவ,
தளிர்முகவாய் தொட்டொருகை அசைக்க, முன்னாள்
திங்களின்முன் நான்நினைத்த எண்ணம் எல்லாம்
திறந்துசொல எனைவிடுத்து நாண மே,நீ
எங்கேனும் துளிநேரம் ஒதுங்கல் இன்றி
எதிர்ப்பியக்கம் நடத்துவதும் முறையோ சொல்லாய்!

தண்டமிழச் செம்மலினார் கன்னஞ் சேர்த்துத்
தழுவுகையில் குளிரேற்றும் தண்ணார் கன்னம்
கொண்டலிட்ட பனிக்கல்லோ; தோலெ டுத்துக்
கொடுக்கின்ற இளநுங்கோ; எதுதான் என்றே
கண்டுவிடத் துணிந்திருந்தேன்! கனிவாய் வந்தார்.
கழுத்தசைத்தேன் குனிந்ததலை நிமிரா வண்ணம்
மண்டையடி யாயடித்தாய் நாண மே,நீ
மகிழ்ச்சிக்குத் தடைவிதித்தல் முறையோ சொல்லாய்!

[எண்சீர் ஆசிரிய
விருத்தங்கள். ]

பேராசிரியர்

*க. கோவிந்தராசனார்* M. A., L. T.,

[முதல்வர், ஆசிரியர் கல்லூரி, குமாரபாளையம்.]

வழங்கிய

**மதிப்புக் கருத்துரை:**

உணவிற்கு உப்பே; இலக்கியத்திற்கு நகைச்சுவையே. இச்சுவையினைக் கோவை. இளஞ்சேரன் அவர்கள் தன்மையொடு, அளவறிந்து, அழகாகத் தம் "புளித்த காதல்" கவிதையில் பயன்படுத்தியுள்ளார்கள். காதல் புளித்தாலும் கவிதை இனிக்கின்றது. ஒரு எடுத்துக்காட்டு:

"பால்வழியும் என்வதனம்..........."

"பால்பண்ணை வைக்கச்சொல்...."

[ஒ-ம்.] க. கோவிந்தராசன்.

# புளித்த காதல்.

**அவன்:**

*சால்புடைய என்காதற் பெருமை யெல்லாம்*
*சாற்றினையோ தலைவியிடம், அருமைப் பாங்கி!*

**பாங்கி:**

*வேல்விழியாள் கேட்டனளே; கேட்ட பின்னர்*
*வேலிருக்கத் தான்கண்டேன்; விழியைக் காணேன்.*

**அவன்:**

*'பால்வழியும் என்வதனம்' என்றே நீயும்*
*பாவைக்குச் சொன்னாயோ?*

பாங்கி :

சொன்னேன், சொன்னேன்;
"பால்வழிந்து வீணுகிப் போகு முன்னர்
பாற்பண்ணை வைக்கச்சொல் போடீ" என்றுள்.

அவன் :

எச்சமிலா என்காதற் கிசைவா ளாஞல்
எடுபிடியாய், இனியவனுய், அன்னுள் உள்ளம்
நச்சுகின்ற படியெல்லாம் உருவம் மாறி
நானவட்கு நிழலெனவே நடப்பே னென்று
'கச்சித'மாய்க் கழறினேயோ?

பாங்கி :

கழறக் கேட்டுக்
"கண்டபடி தன்னுடம்பைக் காட்டு தற்குப்
பச்சோந்தி உடலோடி அவற்கே" என்று
'படக்'கென்றன் உடல்குலுங்க மடக்கிக் கேட்டாள்.

அவன் :

அங்கவுடற் பளபளப்பால், கட்டுப் பல்லால்,
அணிகளிஞல் உடலெல்லாம் தங்க மென்று
மங்கையிடம் சொல்லுதற்கு மறந்தாய் போலும்!

பாங்கி :

*மயிரெல்லாம் வெள்ளியென்றும் சொன்னேன்; அன்னாள்*
*"தங்கத்தால் வெள்ளியினால் ஆன தென்றால்*
*தக்கபடி அவ்வுடலில் பதிப்ப தற்குச்*
*செங்குமுதக் கன்னிப்பெண் செல்லா தாகும்;*
**செங்கற்கள் கூடுமென்று செப்பாய்" என்றாள்.*

அவன் :

*மிடுக்குடைய என்பேச்சில் நகைச்சு வையே*
*மிகவுண்டென் பதைக்கேட்டால் 'சரி'என் பாளே!*

பாங்கி :

*"அடுக்கடுக்காய்ச் சரிந்தசதை நகைச்சு வைக்கே*
*அரசாகி நிற்குமடி அழகாய்" என்று*
*துடுக்காக வெடிச்சிரிப்பில் 'தூதூ' என்றாள்.*

அவன் :

*துளியேனும் 'நானவளைத் துய்க்கேன்' என்று*
*வெடுக்கெனவே கூறிவிட்ட வகையை நீயே*
*விரைவாய்ச்சென் றவட்குடனே விளம்பாய், போ! போ!*

[ உரையாடல் துறையிலமைந்த
எண்சீர் ஆசிரிய விருத்தங்கள்.]

* செங்கற்கள் — மாணிக்கக் கற்கள்; சுடுமண் கற்கள்.

கோவை. இளஞ்சேரன்

**திரு. அரு. இராமநாதன்**

[ஆசிரியர், "காதல்", சென்னை.]

அவர்கள் வழங்கிய

**மதிப்புக் கருத்துரை:**

இமை குவித்து இளமைக் கனவை இன்புறக் காணச் செய்யும் இக் கவிதை சுவை குவிக்கும் பழக் கடையில் சுளையாய் நிற்கிறது.

[ஒ-ம்.] அரு. இராமநாதன்.

# இளமையெனும் போல்லாய்!

*குறுமணலிற் சுவரெடுத்துக் கூரை யின்றிக்*
*குழந்தைவீ டமைத்தேநான் ஆடும் போது,*
*குறும்புபல செய்திடினும் என்றன் வாயிற்*
*குமிழெச்சில் தோய்ந்திட்ட வெல்லந் தின்றே*
*'அறுசுவையில் ஒன்றுகுறை' வென்றே என்றன்*
*அங்கையைச் சுவைத்ததையும் நிரப்பிக் கொண்ட,*
*நறுங்காதல் அத்தானின் பேரன் பெல்லாம்*
*நத்தையோ டாகியதே; நானென் செய்தேன்?*

பாவாடை மேலேயோர் ஆடை சுற்றிப்
போர்த்திட்ட மேலாடை விம்மிப் போக,
மூவாடை களைந்தேசிற் றுடை பூண்டு,
முறுவலித்த எனைக்கண்டு எட்ட நின்று
"தீவாடை உன்னுடல்மேல் தோய்ந்து பின்னர்
தென்றலாய் மீளுவதேன்; புழுதிக் கூந்தல்
பூவாடை வீசுவதேன்" என்ற அத்தான்
பூரிப்பு மறைந்திடவே நானென் செய்தேன்?

"கரையாத கற்கண்டே; வாடா முல்லாய்;
கணுவில்லாச் செங்கரும்பே; பேசுந் தென்றல்?
தரைதோயா நறுங்கனியே" என்றென் றென்னைத்
தலைகுனியச் செய்தென்றன் உடலுக் குள்ளே
புரையோடும் முத்தமிட்டு, மேலும் மேலும்
புத்தின்பக் குறும்பெல்லாம் புரிந்த அத்தான்
பறையொலிக்க எனைமணந்த நாள்ம றந்து
படுக்கைதனி யிட்டனரே; நானென் செய்தேன்?

கோவை. இளஞ்சேரன்

எமைக்குவித்து மகிழ்வெள்ளம் மூழ்கச் செய்த
எழில்குவிக்கும் இளமையெனும் பொல்லாய்; சென்றாய்!
சுமைகுவிக்கும் புறக்கடையில் எனைக்கு வித்தாய்;
சுவைகுவிக்கும் பழக்கடையிற் சுளையாய் நின்றேன்!
இமைகுவிக்குங் குழந்தைதனக் கிசைத்தா யாக்கி
இதழ்குவிக்கும் இன்பமெலாம் ஓடச் செய்தே
இமைகுவிக்கா இரவளித்தாய்; ஓடிவிட்டாய்;
இளமையதே, உனக்கிடர்தான் நானென் செய்தேன்?

[எண்சீர் ஆசிரிய
விருத்தங்கள். ]

கவிதைகள்.

புரட்சிக்கவிஞர்

*பாரதிதாசனார்*

வழங்கிய

**மதிப்புக் கருத்துரை :**

புலவர் இளஞ்சேரன் இயற்றிய இக் கவிதைகள் காதற் சுவை பயப்பன. நடை நன்று. கவிதைத் தொண்டில் அவர் முன்னேறுகின்றார். தமிழன்னை சார்பில் நன்றி கூறுகின்றேன்; வாழ்க இளஞ்சேரன் !

[ஒ-ம்.] பாரதிதாசன்.

# கண்ணல்ல !

*அவளெனக்குக் காதலிதான்;*
*ஆனாலும், அந்தக் காதல்*
*அரும்பியதன் பிறப்பிடத்தை*
*அறிவதற்கு நான்முனைந்தேன்:*
*பவளத்தைக் கதவாக்கிப்*
*பலமுத்தாற் சுவரெடுத்துப்*
*பழத்தேனைத் தேக்கிவைத்த*
*பளிக்கறையாம் வாயமைப்பும்,*

துவளவைக்கும் நுதலழகும்,
தொடைதோயுங் கூந்தல் தானும்
துளிர்க்குமின்பந் தருமெனினுந்
தூய்காதல் வித்தே யாமோ?
குவளைமலர் வேல்வீச்சாய்க்
குவிந்துவரும் இமைப்பொன் றுலே
குலைநடுக்கம் ஏற்றுவது
கண்ணன்று; காதற் கூடம்!

கொன்றுவிடக் கோலெடுக்கும்
கொடுமாலை, சோலை தன்னில்
கொடிபடர்ந்த மேடையிலே
குனிந்திருந்தேன்; தோள்சி லிர்க்க,
'தென்றலுக்குங் கையுண்டோ'
எனமயங்கிக் கழுத்த சைத்தேன்;
தெளியாத கள்ளுண்டேன்;
தேங்குமரி குனிந்து நின்றுள்!

*வென்றபின்னும் உயிர்குடிக்கும்*
*வேல்விழியை நானிருக்கும்*
*'வெலவெல'த்த நிலையுணர்ந்தும்*
*"வெம்மையொடு சென்றுயிர்தான்*
*மென்றுவிட்டு வா"வென்றே*
*மெல்லிமையைத் தூது விட்டாள்;*
*மென்றுவிடப் பாய்ந்தவைகள்*
*கண்ணல்ல காதலின்வேர்!*

*"கணுக்களெலாங் காதலேற்றுங்*
*கருவிழியில் என்றன் மேனி*
*காட்சிதரல் உன்னுளத்தின்*
*படப்பிடிப்போ" என்று கேட்டேன்;*
*"நுணுக்கமறி யானைக்கண்*
*நுமக்குளதோ" எனப்புகன்றாள்;*
*"நின்கரும்புச் சொற்களுக்கு*
*நான்யானை" எனநவின்றேன்;*

'துணுக்'கென்றே ''பெயரெனக்கு
வேம்பன்றே'' என்று ரைத்தாள்;
''துவைத்துண்ண ஒட்டகமாய்த்
தோன்றுவ''னென் றெடுத்து ரைத்தேன்;
அணுக்களையுந் தூளாக்கும்
அம்பொன்றை அனுப்பி விட்டாள்;
அவ்வம்புங் கண்ணன்று
காதலுக்கோர் காந்தக் கல்லாம்!

''குடக்கணக்கு வேப்பெண்ணெய்
குலவினிப்பே, உன்றன் தேன்வாய்க்
குமிழியெழும் ஒருதுளியால்''
எனமுடித்தேன்; நாணந் தன்னால்
'படக்'கென்றே திரும்பிவிட்டாள்
படையெடுத்த நாணத் தின்மேல்
பணைப்பழகு முடிசூடிப்
பளிச்சிட்ட பெருமை கண்டேன்.

"கிடக்கென்னைத் திரும்பிப்பார்
    கண்ணல்ல" என்றவள்தன்
    கிளிக்கழுத்தின் மென்மைமிகு
    கிளர்முகவாய் தொட்ட சைக்கக்
கடைக்கண்ணை ஓட்டிவிட்டுக்
    கண்ணோட்டஞ் செய்து நின்றாள்;
    கண்ணோட்ட மோ,அதுதான்
    அன்றன்று, காத லோட்டம்!

[பதின்சீர் ஆசிரிய
விருத்தங்கள். ]

கோவை. இளஞ்சேரன்

## *திரு. 'அகிலன்' அவர்கள்*

வழங்கிய

**மதிப்புக் கருத்துரை :**

கவிஞர் கோவை. இளஞ்சேரன் தமக்கு மகன் பிறந்த செய்தியைக் கேட்கிறார். கேட்டவுடன் இன்பக்கவிதை சுரக்கிறது. "ஆண் பிறந்தான் எனக் கேட்டால் அமுதெனக்கோர் இனிப்போ ?" எனக் கேட்கிறார். அமுதச்சுவையை இக்கவிதையிலும் சுவைக்கிறோம். சுவையுள்ளதை இரண்டு நிலையிலும் சுவையற்றதாகக் காட்டுவது கவிதையில் புதுமை.

[ஒ-ம்.] அகிலன்.

# அமுதமோரு சுவையோ ?

*புன்னைப்பூ முகம்வெளுக்கப் புதர்முல்லை சிரிக்கும்;*
*புதுச்சுனையின் நீர்கறுக்கப் பொங்குத்தேன் நகைக்கும்;*
*பின்னழகைப் பாரென்று மின்னல்மயில் ஆடும்;*
*புன்னகைக்கும் மாளமிட்டுப் புறவினங்கள் கூடும்;*
*தென்னையுச்சி யோலையைத்தன் யாழிசையாய் மீட்டித்*
*தென்றல்வளர் சோலையதில் தெரிவைமட்டும் இல்லை,*
*கன்னியில்லாச் சோலையிலே தென்றலுமோர் குளிரோ ?*
*கன்னியவள் அணைத்திருந்தால் தென்றலுமோர் குளிரோ ?*

*தவழ்ந்துவரும் வெள்ளத்தில் மிதந்துவரும் நுரையின்*
*தளிர்மென்மைப் பஞ்சணைகள்; தந்தக்காற் கட்டில்;*
*அவிழ்ந்துவரும் முல்லைமணம்; அசைந்துவருந் தென்றல்*
*அருங்கலவைச் சந்தனத்தை அள்ளியள்ளி வீசும்;*
*குவளைக்குள் தீம்பாலோ 'குடிப்பா'யென் றழைக்கும்;*
*குறைவில்லா அவ்வறையில் குமரிமட்டு மில்லை,*
*அவளில்லாப் பள்ளியறை சந்தனமோ கமழும் ?*
*அவளிருந்தாற் சந்தனத்தின் மணச்சிறப்போ அவிழும் ?*

*சீரகச்சம் பாவரிசி செழும்பாலிற் பொங்கிச்*
*சிரிக்கின்ற மல்லிகைபோற் சிதறவைத்து, மேலே*
*மோரகன்ற வெண்ணெயிலே முறுகாத பாகை*
*முழுகவிட்ட அமுதமதை உண்ணவழைத் தன்னை*
*''ஊரடங்கிற் றெனவுரைத்தாள்; உள்ளறையில் அவளோ,*
*ஊசிபட்ட புழுப்போலக் குழவிபெறத் துடித்தாள்;*
*ஆரணங்கு துடிக்குங்கால் அமுதெனக்கோர் சுவையோ ?*
*'ஆண்பிறந்தான்' எனக்கேட்டால் அமுதெனக்கோர் சுவையோ ?*

[எண்சீர் ஆசிரிய விருத்தங்கள். ]

கோவை. இளஞ்சேரன்

கவியோகி

***சுத்தானந்த பாரதியார்***

வழங்கிய

**மதிப்புக் கருத்துரை :**

அகமுகக் காதலின்
சுவைமிகக் கூட்டி
அமுதத் தமிழிற்
குழைத்தநற் கவிதை.

[ஓ-ம்.] சுத்தானந்த பாரதி.

# அந்த ஒலி!


*அந்தஒலி, பஞ்சாலைச் சங்கொலித்த*
*அமுதஒலி, உழைத்தவர்க்கோ அன்பொலியாம்!*
*சிந்துபாடிப் புறப்பட்டான் சிவக்கொழுந்து,*
*சிறகடித்து வலைப்பறவை பறந்ததென!*
*வந்துசேர்ந்த தோழர்கள் குரலெடுத்து*
*வரவேண்டும் பொதுவுடைமை எனவொலித்தார்;*
*அந்தஒலி, இவன்குலத்து வாழ்வொலியாம்;*
*''அஃதென்றோ'' என்றேங்கி வீடடைந்தான்.*

ஆடோட்டி வந்ததங்கை "அண்ண"வென்ருள்;
"அண்ணியெங்கே" என்றவிழ்த்தான் ஆத்திரத்தை:
"ஓடோடி வருகின்றேன்" என்றுரைத்தே
ஓடியுளாள் குடமெடுத்தே" எனமுடித்தாள்;
பேடோடு பேசுதற்குத் துடித்தமனம்
பேதுற்றுப் 'படபட'டென்றே அலறுகையில்
காடோடி மானெனவே குதித்துவந்தாள்;
கைவளையல் வரவுசொல்லி ஒலித்ததங்கே!

எழுந்தஅந்த வளையிெனாலி யாழிசையின்
எதிரொலியாம்; அவன்செவிக்கோ தேனிசையாம்;
விழுந்தவுடன் திரும்பிவிட்டான்; அந்நொடிக்குள்
"அத்தா"னென் றேரொலியைச் சொரிந்திட்டாள்;
"கழுத்தென்ன அமுதவூற்றே; அன்றன்று
கற்கண்டோ; எவைகூட்டிக் கலந்திட்ட
பழுத்தஅன்பின் ஒலி"யென்ருன் "போங்களத்தான்"
எனக்குனிந்தாள்; எங்குபோவான்? சொக்கி(ப்)
போனுன்,

[காய்ச்சீரான் அமைந்த
அறுசீர் ஆசிரிய விருத்தங்கள்.]

# புற இயல்



கோவை. இளஞ்சேரன்
**கவிதைகள்.**

புற இயல்

## மணிகள் :

★

பறந்தே போ!
களஞ்சியத்தில் கறையான்.
எவன் தமிழன்?
செந்தமிழ் இன்பம்.
தமிழார் சேரன்.
வாழ்க! வாழ்க!
தைத் திங்கள்.
மனிதப் பூண்டு.
தவழும் தெய்வம்.
நாணம் எங்கே?
ஏட்டுச் சுரங்கங்காள்!
இயற்கை ஏடு.
படைஞர் [இராணுவ] ஆட்சி.
தமிழா கேள்!
மே தினம் – ஓர் எச்சரிக்கை.
நீரோட்டம்.
பிழை ஒரு கொலை!
அறிக்கை ஒன்று.
மாணவர் பத்து.
பள்ளி நாற்பது.

அறிஞர்

**C. N. அண்ணாதுரை** M.A., M.P.

அவர்கள் வழங்கிய

**மதிப்புக் கருத்துரை:**

தமிழ்ச் சுவையுடன் கற்பனைச் செறிவு கலந்து நல்ல கவிதை வடிவமெடுத்து மகிழ்விக்கிறது. தென்றலைப் 'பறந்தே போ' என்று முடித்திருப்பது பாராட்டுக் குரியது. வளர்க கவிதைத் திறம்; வாழ்க தமிழ் வளம்!

[ஒ-ம்.] அண்ணாதுரை.

# பறந்தே போ!

*மரத்தடியில் தனித்தவனாய்ப் படுத்தி ருந்தேன்;*
*மகிழம்பூ 'பொலபொ'லென்றே உதிர்ந்த தங்கே;*
*உரத்ததொரு குரலெடுத்து "யார்தா னங்கே*
*உதிர்த்த"தென்றேன்; உருக்காணேன்; சொல்லே கேட்டேன்:*
*"மரத்தடியின் மணவாளா! மணமா காத*
*மங்கைநான், பலரணைக்கும் பெண்ணென் றாலும்*
*பரத்தையல்லேன்; ஆடிவரும் பருவத் *தென்கால்*
*பெயரெனக்கு; கவிஞரெலாந் தென்ற லென்பார்"*

* தென்கால் — தெற்கிலிருந்து வீசும் காற்று.

எனக்கூறி முடிக்கவில்லை தழுவி விட்டான்;
எனதுடலில் இன்பந்தான் ஓடக் கண்டேன்;
"உனக்கெனவே இங்குவந்தேன்; ஆவி ஞம்பான்
உடன்போக வேண்டுமங்கு காத் திருப்பான்;
கணக்காக நேற்றுமாலை கழறி வந்தேன்.
'கட்டாயம் இன்றுமாலை வருவான்' என்றே
மனக்கவலை கொள்ளாதே விடைகொ" டென்றாள்
'மற்றொருவன் யா'ரென்றேன்; மாற்றம் சொல்வாள்:

"கொட்டுகின்ற தேன்போலுந் தனிமை தன்னில்
கொதித்ததனால் இன்றைக்குக் குமரி யோடு
கட்டிளைஞன் வந்திருப்பான் கைகோத்" தென்றாள்
'கட்டழகி பக்கத்தில் காந்தட் கையால்
தொட்டணைத்த படியிருப்பான்; தோழி யுன்பால்
துளியேனும் நோக்கமிடான். நில்லாய்' என்றேன்
மொட்டினிலே சுற்றிவரும் மோப்ப வண்டாய்
மொய்த்தென்னைச் சுற்றிவந்து மொழிய லானான்.

''நெருப்புக்கு முன்னமர்ந்திட் டெதையோ சொல்லி,
நெய்யுணவை விழுங்கிவிட்டுச் சந்த னத்தால்
உறுப்பெல்லாம் பூச்சிட்டே ஐய ரங்கே
உடல்வியர்வை வழிந்தோடச் சாய்ந்தி ருப்பார்;
விருப்பில்லா அவ்வியர்வை விலக்கு தற்கு
விரைந்தேக வேண்டாமோ விளம்பாய்'' என்ருள்
'துருப்பெனவே கைநழுவா விசிறி யங்கு
துணையிருக்கு' மெனப்பகர்ந்தேன்; துணிந்து சொல்வாள்:

வெய்யிலுக்கே உடல்மறைத்து வளம னைக்குள்
வேலியென்னும் நோயினெண்ணும் ஒன்ருய்க் கொண்டு
பொய்யுடனே வஞ்சகந்தான் பொலிவுக் கென்று
பொழுதெல்லாம் அதைநடத்தும் பணத்தோட் டத்தார்
கொய்யாத மலர்போலுங் கொழுமு டற்கே
குளிரேற்றப் போகவிடை கொடுப்பாய்'' என்ருள்
'கையடித்தாற் காற்றடிக்கும் மின்சா ரத்தின்
காற்றிருக்க நீயெதற்கு வேண்டாம்' என்றேன்.

கோவை. இளஞ்சேரன்

''கோழிகூவக் கேட்டெழுந்து கோட்டான் தன்னின்
கூக்குரலால் குடிசைவந்து கூழ்கு டித்துப்
பாழிமையை மூடுதற்குப் படிக்கட் டின்மேல்
படுத்துதலை யணைத்துக்கண் படுக்கும் போது
தோழியென நான்தழுவத் தொடர்வன்'' என்று
தோள்பெயர்ந்தாள்; 'நடைவேண்டாம் நேரம் போகும்
வாழியஎன் தென்றலன்பே, ஓட்ட மாய்ப்போ!
வான்வழியே பறந்தேபோ'' எனம றைந்தாள்.

[எண்சீர் ஆசிரிய
விருத்தங்கள்.]

கவிதைகள்.

பன்மொழிப்புலவர்

*கா. அப்பாத்துரையார்* M.A.,L.T., M.O.L.

[ஆங்கில-தமிழ் அகராதி வெளியீட்டுத்துறை.
சென்னைப் பல்கலைக் கழகம்.]

வழங்கிய

**மதிப்புக் கருத்துரை:**

வளஞ்சிறக்கும் தமிழேட்டின்
தரங்குரைக்கும் உரைஆய்வுக்
களங்கிளர்ந்த கைதவரை
இளஞ்சேரர் எதிர்த்தெழுந்தார்;
விளங்குபுகழ் மெய்யுரைகள்,
மெய்விளக்கும் ஆய்வுரைகள்
தளங்காண இனமலர்ச்சி
தழைக்குமினி தமிழகத்தே.

[ஒ-ம்.] கா. அப்பாத்துரை.

# களஞ்சியத்தில் கறையான்.

*உறைந்திட்ட தமிழகத்தின்*
*உயர்வறிஞர் தமிழர்க்கே*
*உரைத்திட்டார் உரைகல்லில்*
*உரைத்தெடுத்த நற்பொருளை,*
*'உரைவகுப்பேன்' என்றுசில*
*உரையாளர் உரையெழுதி*
*உறையினின்று வாளுருவி*
*உடல்குறைத்தார் தமிழினுக்கே.*

*தொல்காப் பியமென்னுந்*
*தமிழ்வரம்புத் தொன்னூற்கு*
*நல்லுரைகள் முன்னிருக்க*
*நச்சினூர்க் கினியனெனும்*
*பொல்லாத ஒருபுலவன்*
*புகுந்திட்டே உரையெழுதி,*
*இல்லாத புகுத்தமைத்தே*
*இழிவளித்தான் தமிழர்க்கே.*

*நல்லொழுக்கம், நற்பண்பு,*
*நாகரிகம், வாழ்வகையைச்*
*சொல்வித்த பொய்யாத*
*சொத்தென்னும் குறள்தனக்கே*
*வல்விலங்காம் வடமொழியின்*
*வழிகொண்டே உரையெழுதிக்*
*கொல்வித்தான் தமிழ்ப்பண்பைக்*
*கொடும்பரிமே லழகனென்பான்.*

கிள்ளைமொழி ஆழ்வார்கள்
 கிளந்திட்ட பெருநூற்கு
வெள்ளையாய்ப் பெருவிளக்கம்
 வரைவதாய், வடமொழியைத்
தள்ளாமல் தமிழ்தள்ளித்
 தகர்த்திட்டான் தமிழ்நடையை,
பிள்ளையெனும் போர்வையிலே
 பெரியவாச்சான் எனும்பெயரோன்.

நையாத தமிழினுக்கு
 நலிவைமுன் அவர்செய்ய,
ஐயா,பல் கலைக்கழக
 ஆராய்ச்சி செய்திட்டோர்
'மெய்யாக வடமொழியே
 முதலாகும்' எனக்கூறி
வையாமல் புரிந்திட்டார்
 வாள்வீச்சு தமிழினுக்கே.

*களஞ்சியத்தில் அந்துமுதல்*
*கறையானும், வண்டுகளும்*
*வளம்பெற்று நெல்லழிக்கும்*
*வகையேயாய்த் தமிழழுதைக்*
*குழம்பாக்கி வாழ்வதொடு*
*குலைக்கின்றார் தமிழகத்தை;*
*உளம்பதைக்கும் இச்செயலை*
*உடைத்தெறிந்து தமிழ்காப்பீர் !*

[தரவு கொச்சகக்
கலிப்பாக்கள். ]

பண்டித-வித்துவான்

ஞா. தேவநேயப் பாவாணர் M. A.

அவர்கள் வழங்கிய

**மதிப்புக் கருத்துரை :**

எவன்றமிழன் என்றறிதல்
இல்லையெனும் இக்கால்
எவன்றமிழன் என்றறிய
எண்ணின் - "எவன்றமிழன்"
என்னினிய கோவை
இளஞ்சேரன் பாடலை
இன்னினியே கண்டு தெளி.

[ஒ-ம்.] ஞா. தே.

# எவன் தமிழன் ?

ஏட்டிலுள்ள தமிழரினால்
எக்களித்த தென்னுள்ளம்;
நாட்டிலுள்ள தமிழரினால்
நாணமதே தோன்றிற்று;
கேட்டிடுவீர் தமிழகத்தீர்,
கேடுற்ற நம்நிலையே!
நாட்டிடுவீர் இனியேனும்
'நாமும்சீர்த் தமிழ'ரென்றே.

*மின்மினியும் விண்மீனும்*
*மினுக்குவதில் ஒன்றேயாம்!*
*நன்முல்லை தும்பையிவை*
*நறுமணத்தில் ஒன்றுமோ?*
*என்மொழியுஞ் செந்தமிழ்தான்*
*என்றேதாம் கூறிடினும்,*
*தன்மானம் இல்லையெனில்*
*தமிழரெனத் தகுவாரோ ?*

*தமிழனெனில் தமிழகத்தில்*
*தமிழுயர்வுக் கெழவேண்டும்;*
*தமிழனெனில் தாய்நாட்டின்*
*தனியுயர்வுக் கெழவேண்டும்;*
*'தமிழ'னென உணர்வோடு*
*தன்னினத்தைத் தழுவவேண்டும்;*
*தமிழனெனில் உலகமதில்*
*தலைதூக்கி நிற்கவேண்டும்.*

தமிழழிக்க நினைப்போனின்
தலையழிப்போன் தமிழனன்றோ!
தமிழினத்தைச் சுரண்டுவோனைத்
தகர்த்திடுவோன் தமிழனன்றோ!
தமிழகத்தில் தீப்பழக்கம்
தயக்கிடுவோன் தமிழனன்றோ!
தமிழ்மொழிக்கே தனிச்சிறப்பைத்
தருவோன்சீர்த் தமிழனன்றோ!

மலையெதிர்ந்தே வந்திடினும்
மார்பெதிர்ந்த தமிழர்கள்
தலைவணங்கித் தகாதோர்க்குத்
தரைநோக்கித் நிற்பதோகாண்!
கலைவளர்த்த தமிழ்க்கலைஞர்
கயமையினூர் உண்ணவிரி
இலைவளர்க்க வாழ்தனன்றோ?
இலையோகாண் தன்னுணர்வே?

மொழிப்பற்றே விழுப்பற்ருய்
    மொய்ப்புற்ருேன் முழுத்தமிழன்;
பழிப்பற்ற விழிப்புற்றுப்
    பதைப்புற்றுத் தமிழ்க்கிடரை
அழிப்புற்றுக் களிப்புற்ருேன்
    இழிப்பற்ற மறத்தமிழன்;
செழிப்புற்ற செந்தமிழ்ப்பேச்
    சுறப்பெற்ருேன் செழுந்தமிழன்.

தமிழ்ப்பண்பா டொழுக்கமதன்
    தகவறிந்து தழுவவரும்
இமிழ்கடலார் உலகினத்தார்
    இனியரென அரவணைத்துக்
கமழன்பால் நண்பரெனக்
    கண்டிடுவோன் தமிழ்ப்பண்பன்;
அமிழ்தன்புக் குயிரதையும்
    அளித்திடுவோன் அருந்தமிழன்.

கவிதைகள்.

*உள்ளத்தே கேடெடுத்தே,*
*உதட்டகத்தே பீடெடுத்து,*
*முள்ளொத்தே மொழியெடுத்து,*
*முறுவலித்த முகமெடுத்த*
*கள்ளத்தார் தமையொதுக்கிக்*
*'கசடற்றார் தம'ரெனவே*
*கொள்ளத்தான் ''யாதும்மூர்*
*யாவருங்கே ளிர்''ரென்றான்.*

[ தரவு கொச்சகக்
கலிப்பாக்கள் ]

கோவை. இளஞ்சேரன்

**புலவர் ஆ. மகிழ்நன் அவர்கள்**

வழங்கிய

**மதிப்புக் கருத்துரை :**

அமிழ்துநிகர் தமிழ்ச்சுவையை
அளித்தருளும் இளஞ்சேரர்
தமிழ்தந்த புலவர்தம்
தகுதியெலாம் நினைவுகொளத்
தமிழ்தந்தார் "செந்தமிழ்இன்
பம்"மென்னும் தலைப்பமைத்தே;
கமழ்கின்ற இவர்கவிதை
காரிருட்குப் பேரொளியாம் !

[ஒ-ம்.] ஆ. மகிழ்நன்.

# சேந்தமிழ் இன்பம்.

*செந்தமிழ் இன்பமதே - தமிழீர்,*
*செப்பும் அளவுளதோ ?*
*அந்தமில் வானளக்க - தமிழீர்,*
*அளவுகோல் கண்டதுண்டோ ?*

*கன்னல் கசப்பென்பார் - செந்தமிழ்*
*கண்டிட்ட நுண்சுவையோர்;*
*மின்னல் இருட்டென்பார் - செந்தமிழ்*
*மேவும் ஒளியுணர்வோர்.*

உள்ளம் கவிழ்ந்திருப்பின் - செந்தமிழ்
ஊக்கம் அளிப்பதுகாண்;
வெள்ளம் எனஅறிவைச் - செந்தமிழ்
வெற்றிக் களித்திடுங்காண்!

முன்னவர் வாழ்ந்தநிலை - செந்தமிழ்
முன்னிற்கச் செய்வதுகாண்;
பின்னவர் வாழ்வினுக்கும் - செந்தமிழ்
பெற்றி அளிப்பதுகாண்!

வள்ளுவ னரிளங்கோ - கபிலர்
பரணர் சாத்தனுரை
அள்ளித்தன் செல்வங்களாய்ச் - செந்தமிழ்
அணைத்து நிற்பதுகாண்!

வீரத்திற் குச்சேரன் - செந்தமிழ்
வளர்த்த பாண்டியனை,
சாரப் புகழினுக்கும் - சோழனைச்
சாற்றி மகிழ்வதுகாண்!

துலக்கும் மொழிவரம்பில் - செந்தமிழ்
தொல்காப் பியத்ததுகாண்;
இலக்கண நூலதுகாண் - அதற்குள்
இலக்கியம் மிளிர்ந்திடுங்காண்!

பத்துப்பாட் டெட்டுத்தொகை - பதினெண்
கீழ்க்கணக் கெனுமொளிசேர்
முத்தணி, பட்டுடையால் - செந்தமிழ்
முறுவல் கொள்வதுகாண்!

கண்ணகி தன்னிறையும் - மேகலை
கன்னித் துறவதுவும்
பண்ணொடு கூத்ததுவும் - செந்தமிழ்
பணைக்க நிற்பதுகாண்!

தேவர்சிந் தாமணியே - தேன்சுவை
தேக்கும்முத் தொள்ளாயிரம்,
மேவுநன் னூல்காரிகை - எனும்பல்
மேன்மைகொண் டிசைப்பதுகாண்!

நாவுக் கரசரியல் - ஞான
சம்பந்தர் தேனிசைச்சொல்
பாவுக்கு மாணிக்கமும் - சுந்தரர்
பாட்டும் தமிழ்க்கனிகாண்!

கம்பர் கலையதனால் - சேக்கிழார்
கனிதமிழ்ச் செஞ்சொலினால்
செம்மைச் செயங்கொண்டார் - கலிங்கச்
செழும்பர ணிச்சுவையால்,

குமர குருபரரால் - தூயநம்
மாழ்வாரி ராமலிங்கர்
கமழ்புகழ்ச் சுந்தரனார் - மீனாட்சி
சுந்தரர் பேரறிவால்,

தங்கம் எடுத்ததென - நம்மரும்
சங்கநூல் கொண்டுதந்த
பொங்கு தமிழ்த்தாத்தா - உ.வே.சா.
பொற்பால் பொலிந்திடுங்காண்!

கோவை. இளஞ்சேரன்

*பாவுக் கொருபுலவன் - பாரதி*
*பாட்டில் தனிப்புகழ்காண்;*
**"தேவி"க் கொருமழலை - செந்தமிழ்*
*தேக்கி வைத்ததுகாண்!*

*தனித்தமிழ் மறைமலையால், - தென்றல்*
*தருந்திரு. வி. க. தன்னால்,*
*இனித்தசோ பாரதியால் - செந்தமிழ்*
*இயங்கும் தனிப்பொறிகாண்!*

*விண்ணில் ஒளிர்மீன்கள் - கணக்கில்*
*விரிக்க ஒண்ணுமோகாண்;*
*எண்ணில் தமிழ்நூற்கள் - எண்ணில்*
*என்றும் கிடைக்குமோகாண்!*

*'தமிழ்தமிழ்' என்றுசொல்ல - வாயினில்*
*தண்ணெனத் தேனூறும்*
*தமிழொன்றை எண்ணிடிலோ - வாழ்வினில்*
*தங்கிடா இன்பமுண்டோ?*

[ இடைச் சீர் விட்டிசைக்கும்
ஈரடிக் கலித்தாழிசை. ]

* தேவி — கவிமணி தேசிகவிநாயகனார்.

கவிதைகள்.

**சிலம்புச்செல்வர்**
**ம. பொ. சிவஞானம் அவர்கள்**

வழங்கிய

**மதிப்புக் கருத்துரை :**

கவிஞர் இளஞ்சேரன் தன் பெயராலும், புலமையாலும் இளங்கோவடிகளின் வாரிசாக விளங்குகிறார். சிலம் பொலித்த செல்வன் புகழ்பாடி அவர் யாத்த இக்கவிதைகள் சிலப்பதிகாரத் திற்குக் கிடைத்த சிறந்த விமர்சன மாகும். கோவை. இளஞ்சேரன் புலமை வளர்க; புகழ் பரவுக !

[ஒ-ம்.] ம. பொ. சிவஞானம்.

# தமிழார் சேரன்.

*தமிழிற் கவிஞர் தகவிற் பெரியர்,*
*தருநற் சுவையிற் றமிழே யனையர்;*
*தமிழப் புலவர் தம்மிற் சிலம்பீன்*
*தவமார் இளங்கோ தகவே பகர்வேன்:*

*வளமை, எளிமை, இனிமைச் சொல்லால்*
*வற்ரு ஊற்றும், வடித்த சுவையாம்,*
*இளமை எழிலாம், முதுமை அறிவாம்,*
*இளமென் கதிராம் இளங்கோ கவியே !*

இயலே வனைவாய், இசையே ஒலியாய்,
இனிமைக் கூத்தே இடையார் பரலாய்,
கயலே யனைகண் ணகியார் பொருளாய்க்
கவிஞர் புலவன் கவிதேர் சிலம்பே.

ஞாயிற் றதனை, நகைதிங் களதை
யாம்"போற் றுது"மென் றெருகா வியத்தின்
வாயிற் றிறந்த வளமார் புதுமை
அவனே யன்றி எவனே செய்தான்?

பொழில்சேர் வளமார் புகார்க்காண் டமதில்
பொன்னூர் உளத்தன் பொழியும் பெருமை
எழில்சேர் கவிதை ஏற்றந் தனிலே
எளிமை தவழும்; இனிமை அவிழும்.

முத்துடை வளமார் மதுரைக் காண்டம்
முழுதும் இழைந்து முழங்கும் பொருளில்
அத்துணைச் சுவையும் அருங்கண் ணகிதன்
ஆண்மைச் சுவையாம்; அவலக் குவையாம்.

வனப்பார் மலைசேர் வஞ்சிக் காண்டம்
வழங்கும் புகழ்மை வகைசேர் பொருளில்
சினப்போர்த் தமிழன் சிறப்பிற் புறமார்
சீற்றம் மிளிரும்; ஏற்றம் ஒளிரும்.

மூவர் மன்னர் முடியர் தமிழர்
மும்முனை யதுவாய் முனைந்தார் பிரிவில்;
பாவார் சிலம்பாம் பாட்டில் மூவர்ப்
பொதுமை திகழும்; புதுமை நிகழும்.

பெண்மைக் குயர்வைத் தண்மைப் பொருளால்
பெருங்காப் பியமாய்ப் பேழைச் சுவையாய்,
உண்மைக் கலையாய், உயர்பொன் குவையாய்,
உலகிற் புகழாய் உலவத் தந்தான்.

மலர்க்கண் ணகியைப் புகார்க்காண் டமதில்
மழலை மகளாய், மதுரைக் காண்டத்
தலர்பேர் *அனையாய், அருவஞ் சிதனில்
அணங்கார் நறுதெய் வதமாய் அமைத்தே.

---

* அனை — அன்னை.

மழலை பயிற்றி, மடப்பம் இயற்றி,
மயலார் வழக்கில் மதுகை செயிற்றி,
அழலை வெயிற்றி, அணங்கைத் துயிற்றி,
அழகைக் குயிற்றும் அமைப்பை வியற்றும்!

அலரும் மலரார் அருமைப் பொழிலாம்
அன்னைத் தமிழின் அழகார் முகமே,
மலரும் வேனிற் கானல் வரியால்
மகிழ்ந்து மலர்ந்து நெகிழ்ந்தே அருளும்.

தமிழ்ப்பண் பதனைத் தமிழ்ச்சீ ரதனைத்
தகுதிக் குரிய தளங்கள் தெரிந்தே
கமழப் புரிந்த கவினைப் *"பீடன்"
றெனுஞ்சொல் லீன்றே, வனைந்தான் சான்றே.

நிமித்திகக் கயவர் நிகழ்த்திடு மயல்கள்
நிலைகுலைந் தழுங்கக் குலைநடுக் குலுங்கத்
துமித்தெறி மறவன்; துறவுகொள் அறவன்;
துகளறு புலவன்; திகழ்தமிழ் வலவன்.

* "பீடு அன்று" – என்பது சிலம்பில் கண்ணகி பேச்சு.

இல்லறச் செல்விக் கொல்காக் காப்பியம்
இயற்றிய துறவோ டிசைத்தநற் றிறவன்;
பல்லிசைக் கலையும், பல்லியக் கூத்தும்
பகுத்துத் தொகுத்து முகிழ்த்த அகத்தன்.

பொருளார் கவிஞன்; பொற்பார் பண்பன்;
புகழார் துறவன்; பொன்னூர் அறிவன்;
திருவார் உருவன்; அருளார் அன்பின்
திகழ்தரும் ஈரன், தமிழார் சேரன்.

[ முடுகு வண்ணத்தியைந்த
ஈரடிக் கலித்தாழிசை. ]

கோவை. இளஞ்சேரன்

இளங்கவிஞர்

*அ. அறிவொளி அவர்கள்*

வழங்கிய

**மதிப்புக் கருத்துரை :**

முத்தடுக்காய் நம்பெருமை
எடுத்துக் கூறி
முயன்றிடுக நல்வாழ்வுக்
கென்று சொல்லும்
தித்திக்கும் பாட்டிதுதான்
வாழ்க்கைக் கப்பல்
திருப்புகின்ற சுக்கானாய்
அமைந்த தென்பேன்!

[ஓ-ம்.] அ. அறிவொளி.

# வாழ்க! வாழ்க!!

*உள்ளத்தை உவப்பிக்கும் ஈரடிகள்,*
*உலகோரை உயிர்ப்பிக்குஞ் சீருரைகள்,*
*கள்ளத்தை வஞ்சத்தைக் கசடதனைக்*
*கல்லியெறி முப்பாலாந் திருக்குறளை,*
*தெள்ளுற்ற தமிழினத்தின் வாழ்வியலைத்*
*தெளிவாக்கும் ஆடியெனச் செய்தமைத்தான்;*
*வள்ளுவப்பேர்ப் பெரும்பெம்மான் எம்மினத்தின்*
*வளமான தலைமகன்சீர் வாழ்கவாழ்க!*

''தமிழினத்தார் தாழ்ந்ததில்லை வாழ்ந்ததுண்டு:
தமிழ்மொழியோ தளர்ந்ததில்லை வளர்ந்ததன்றோ !
உமிழூற்றில் தேன்சுரக்கும் இலக்கியங்கள்
உண்டெம்பால் உலவாத உயர்வினன்றோ !
இமிழ்கடல்சூழ் உலகியல்கொள் நூற்களெலாம்
இசைகுறையா வகையதனில் மிளிர்வதன்றோ !
அமிழ்தமென வாழ்வமைப்போம்'' என்றுசாற்றி
அருந்தமிழீர், உயர்வுற்று வாழ்க,வாழ்க !

நல்லவரோ, வல்லவரோ, அல்லவரோ
நாட்டன்பில் ஊறுரேல் நலமதுண்டோ ?
கொல்லைதனில் குப்பைவளர் கீரைகளும்
கொதிநீரில் பட்டுணவாய்ச் சுவைபயக்கும்.
எல்லவரும் நாட்டிலுறு தீதறுக்க
எண்ணத்தாற் சொல்லதனாற் செயலதனால்
ஒல்லும்வகை முயன்றிடுதல் வேண்டுமன்றோ ?
ஒருவாமல் இவைபெற்று வாழ்க,வாழ்க !

[காய்ச்சீரானமைந்த
அறுசீர் ஆசிரிய விருத்தங்கள்.]

கோவை. இளஞ்சேரன்

***திருமதி. இந்திரா சோமசுந்தரம்***
B. Sc., M. A., M. Litt., B. T.
[ஆங்கில-தமிழ் அகராதித்துறை, சென்னைப் பல்கலைக் கழகம்.]

அவர்கள் வழங்கிய

**மதிப்புக் கருத்துரை :**

தமிழரின் தலைசிறந்த திருநாளாம் தைத்திங்கள் பொங்கலின் வான்சிறப்பினை வண்ணத் தமிழில் வடித்துள்ளார் ஆசிரியர். தண்ணூர்ந்த தைத் திங்களின் எண்ணூர்ந்த ஏற்றமும், பசுந்தமிழின் பண்ணூர்ந்த மாண்பும் பரக்கக் காட்டுவதோடு, வாழ்வாங்கு வாழும் நெறி வகுத்து வையத்திற் கீந்து தமிழினம் மேற்கொண்ட உயர்கொள்கை யையும் வளமுறக் காட்டுகின்ருர்.

[ஒ-ம்.] இந்திரா சோமசுந்தரம்.

# தைத் திங்கள்.

*தங்கம் எனில்தள்ளித் தண்டமிழை அள்ளுகின்ற*
*துங்க மறத்தமிழர் துன்னும் வளமெல்லாம்*
*எங்கள் தமிழகத்தின் ஏற்றங்காண் என்றவராய்ச்*
*சங்கில் முழக்கமிட்டே, சாலக் களிப்புற்றுப்*
*பொங்கல் எனும்பேர்ப் பொலிவாம் விழாக்கண்டார்;*
*திங்கள் பனிரண்டில் தேர்ந்தெடுத்தார் தைம்முதலே.*

கொண்ட தொழில்முற்றிக் கொள்ளும் பயனள்ளி?
அண்டத் துயிருக் களித்து மகிழ்ந்தபின்
உண்ட உணவே உவப்பாம், இனிப்பென்று
கண்டார் களிபொங்கல், கன்னல், கதலி,பால்
தண்டாச் சுவைகொள் தமிழமை பொங்கலாய்;
உண்டோ உலகிலிதற் கொப்பென்பார் போன்றே.

வெம்மை தணிய வேண்டுநம் நாட்டிற்குத்
தண்மை தருந்திங்கள் தைத்திங்கள் அன்றோகாண்!
செம்மை பிறக்கச் செழுந்தை பிறக்குமென்பார்;
நம்மை மகிழ்த்தி நறுவாழ்வைத் தோற்றுகின்ற
கொம்மைத் தைம்முதலைக் கொள்ளுவம், புத்தாண்டின்
சும்மைப் புதுநாளாய்; சுவைப்பம் தமிழ்ச்சுவையே.

கோவை. இளஞ்சேரன்

தையெனுஞ் சொல்லடியால் தைவரல், தைத்திடல்,
தையலென் சொற்கள் தளிர்த்தன: அவ்வெலாம்
கையால் தழுவல், கவினுய் இணைத்திடல்,
மொய்குழல் மங்கையாய் மொய்க்கும் பொருள்கண்டு,
தையலை இணைத்துத் தழுவும் திருமணத்தைத்
தையமை திங்களில் தண்டமிழோர் கூட்டினரே.

தைத்திங்கள் நீரோடைத் தண்மை நலமென்ருர்;
தைத்திங்கள் தண்ணிய தண்மைக்குச் சான்ருகும்;
தைத்தென்றல் வீச்சு தனிக்குளிர் இன்பமாம்;
தைத்திங்கள் காதல் தழுவல் புதுமையாம்;
தைத்திங்கள் இவ்வாறு தக்கபல் லின்பமே
தைக்கக்கூத் தாடுவோர் 'தைதை'யென் றுடுவரே.

[ஆறடித் தரவுக்
கொச்சகக் கலிப்பாக்கள்.]

கவிதைகள்.

முத்தமிழ்க்காவலர்

**கி. ஆ. பெ. விசுவநாதம்**

அவர்கள் வழங்கிய

**மதிப்புக் கருத்துரை :**

அன்பர் கோவை. இளஞ்சேரனது இத்தமிழ்க் கவிதைகள் தாழ்ந்துள்ள இன்றையத் தமிழகத்தை - தமிழ் இனத்தைத் தட்டி எழுப்பும் ஆற்றல் படைத்தவை. தமிழ் மக்கள் இதனைப் பயன்படுத்திப் பலன் அடைய வேண்டுமென்பது எனது விருப்பம்.

[ஒ-ம்.] கி. ஆ. பெ. விசுவநாதம்.

# நாணம் எங்கே?

*கட்டுடைய தமிழரசைக்*
*கடிந்திட்டார் எனுஞ்சொற்கள் இங்கே*
*எட்டியதும் வடநாட்டை*
*எதிர்த்தெழுந்து வென்றிட்ட துங்கன்*
*குட்டுவனுஞ் சேரமன்னன்*
*குலத்துதித்த தமிழரீர்;நீர் இன்றோ*
*குட்டுதற்குச் சாய்ந்துதலை*
*குனிகின்றீர், நாணமெங்கே? நன்றோ!*

தேங்கமழும் முத்தமிழின்
　　தேன்பருகிச் செம்மாந்து தேர்ந்து
வீங்குகின்ற தோள்புடைத்து
　　வீரத்தின் திறங்காட்டி ஆர்ந்த
வேங்கையென வாழ்ந்திட்ட
　　வேர்க்குலத்தீர், தமிழரீர்;நீர் இன்றோ,
தீங்கினத்தின் கையாளாய்த்
　　தீர்ந்துவிட்டீர், நாணமெங்கே ? நன்றோ !

ஆர்ப்பரித்த ஆரியத்தின்
　　ஆணவத்தை அடக்கி,அதற் கேய்ந்த
தூர்பறித்து வெற்றிகண்ட
　　தூய்மன்னன் பாண்டியனும், ஆய்ந்த
தேர்ப்பரியன் நெடுஞ்செழியன்
　　தேர்குலத்தீர், தமிழரீர்;நீர் இன்றோ,
பார்ப்பவரின் காலடியில்
　　படிவதுவோ; நாணமெங்கே ? நன்றோ !

கடைப்பிணமாய்ப் பிறந்திடினுங்
　　　　கருவாளால் வெட்டிவெற்றி கண்ட
படைப்பிணமாய் மதித்ததற்குப்
　　　　பலசிறப்புஞ் செய்தேசீர் கொண்ட
உடைப்பிணமாய் உயிர்நீத்த
　　　　உயர்குடியின் தமிழரீர்; நீர் இன்றோ,
நடைப்பிணமாய் வாழ்ந்துவரல்
　　　　நமக்கழகோ: நாணமெங்கே ? நன்றோ !

மலையெங்கே எதிர்த்திடினும்
　　　　மானமங்கே காப்பதற்குப் பாய்ந்தே
தலையங்கே தடிந்தேனும்
　　　　தந்திடுவார் உயிரங்கே, மாய்ந்தே.
அலையங்கே எழுந்ததெனை
　　　　அலைக்கழிந்த தமிழரீர்; நும் பொன்றுக்
கலையெங்கே ? மானமெங்கே ?
　　　　கவினெங்கே ? நாணமெங்கே ? நன்றோ !

[கெடிலடி ஆசிரிய
விருத்தங்கள். ]

கோவை. இளஞ்சேரன்

**டாக்டர். ப. மு. சொக்கலிங்கனார்**
L. M. & S.

வழங்கிய

**மதிப்புக் கருத்துரை:**

ஆதியில் தமிழன் ஆக்கிய சொல்லென
ஓதிடும் சொற்களில் ஒருசில எடுத்து
மலையினிற் பிறந்த மனிதன் முறையே
தொடுகடல் வரைப்பெலாம் தொடர்ந்த கதையை
ஆங்கவன் தோற்றிய அருஞ்சொலைப் புணர்த்துப்
பாங்குடைக் கவிதையாய்ப் படைத்ததென் என்பேன்
என்றும் இளைய சேரன் அவன்திறம்
நன்றே யாயினும் நான்சொலல் நகையே.

[ஒ-ம்.] ப. மு. சொக்கலிங்கம்.

# மனிதப் பூண்டு.

*மலையில் முளைத்தது மனிதப் பூண்டு;*
*தொலைகடற் பரப்பெலாம் தொடர்ந்ததப் பூண்டே.*
*அப்பெரும் பூண்டோ அருந்தமிழ்ப் பூண்டெனச்*
*செப்பினர் உயிரியல் செம்மைகொள் அறிஞர்.*

*முளைவெடித் தெழுந்து முளைத்தவப் பூண்டு*
*தளிர்த்தும், கிளைத்தும், தழைத்தும், முகைத்தும்,*
*மலர்ந்தும், சுரந்தும், மணந்தும், மறிந்தும்,*
*கிளர்ந்தும், காய்த்தும், கனிந்தும், விதைத்தும்*
*பரவிய கதையோ விரவியே பெருகும்.*

அவ்வழி,
முதற்பெருஞ் சமூக முதல்வர் தோன்றி
முற்கியும், கனைத்தும், மொணகியும், கூவியும்,
சொற்குறிக் கொலித்தும், சொல்லுரு வாக்கியும்.
ஒருசொற் கொண்டே ஒண்பொருள் பெருக்கியும்
திருமொழி எனுந்தமிழ்ப் பெருமொழி படைத்த
திறமெனும் முதலதி காரம் தெரிப்பன்:

பசியும், பரிவும், பற்றிப் பிணைக்கப்
புசித்திடத் துடித்தனர்: புன்பயிர் உகந்ததை
'ஆ'வென அருந்தினர்; 'ஈ'யெனச் சுவைத்தனர்;
[1]'ஊ'வென உண்ண [2]'ஏ'யென எய்தனர்;
'ஓ'வெனும் ஒலியால் ஓடுநீர் பருகினர்;
[3]'ஐ'யென வியந்தனர் [4]ஔவியம் அறியார்,

பாறைக் கிடுக்கில் பாய்ந்த கிழங்கைத்
தூரொடு பறிக்கத் துதைந்த பாறையின்
சில்லுடைப் பக்கம் கல்லிப் பெயர்த்தனர்;
கல்லப் பட்டதைக் 'கல்'லெனச் சொல்லினர்.
சிந்தையைக் கல்லிச் சிந்தனை இயக்கி
அந்தக் கல்லலால் அறிவியல் புகுதலால்
'கல்வி'யென் றொருசொற் கண்டனர்.

---

1 ஊ — ஊன். 2 ஏ — அம்பு.
3 ஐ — வியப்பு. 4 ஔவியம் — பொறாமை.

சின்னீர்
ஒழுகி ஓடல் ஓர்ந்தவர் தொடர்ந்தனர்;
தொடர்ந்த அந்நீர் 'தொப்'பெனப் பள்ளத்
தடர்ந்தே வீழ்ந்த ஆர்ப்பொலி கேட்டனர்;
அருமையாய் வீழ்ந்த அதனைக் கண்டவர்
அரும்வீழ் - அருவீழ் - 'அருவீ' என்றனர்.

நலமும், எழிலும், வளமும் மல்கிய
வளமை - மல்லல் வழங்கலின், மல்லே
உளதை 'மலை'யென உரைத்தனர்; கண்டு

வியந்த அருவிநீர் விழுந்தடித் தோட
நயந்து, தொடர்ந்து நண்ணினர் தரையே;
சரிந்துவீழ்ந் திறங்கிய சரிவது நிற்கத்
தரிப்பது 'தரை'யென, நில்அம் 'நில'மெனப்
பார மலைக்குப் *பாராய்த் தாங்கலின்
'பா'ரென, உயிர்கள் படிதலின் 'படி'யெனச்
சாற்றினர்;

பாதி உடலிடம் °'அரை'யெனக்
காற்பகு தியதைக் 'கால்'எனும் உறுப்பாய்க்
கண்டவர், மலைகால் ஊன்றப் பெற்ற
மண்டிலம் கால்-கான் கால்+து 'கா'டென
விளம்பிச் செறிவுக் குளம்பதைப் புற்றனர்.

* பார் – அச்சு.
° அரை – இடுப்பு.

நீரின் ஓட்டமே நீள்நெறி யாக்கிப்
பாரில் அதனைப் பார்த்து நடந்தனர்.
ஆறாய் - வழியாய் அந்நீர் நடத்தலின்
யாறென அழைத்தனர்;

ஆறெனும் அஃதே
பிளந்திரு பாங்காய்க் கிளர்ந்தோ டுவதுகண்
டிடுப்பிடைக் காலின் இருபிரி வென்னத்
தொடுத்து, வாய்போல் *புழைவழி வழிதலின்
'வாய்க்கால்' என்றனர்; வார்ந்தோ டுவதை
மடுத்தலின் 'மடை'யென,

மடைவழிப் பாயுநீர்
வரம்பாய்க் கிடந்த 'வரப்'பிடைச் சிறைப்படல்
'செறு'வென, செய்தொழிற் குற்றதைச் 'செய்'யென
வறுநிலம் நீரால் கழல்தலின் கழல்நீர் -
கழனீர் - 'கழனி'; வையம் தொழிற்படும்
கிழமையின் வையல் - 'வயல்'என வளத்தொடு
வளர்ந்தவர், ஓடுநீர் வழிக்கொண் டேகினர்;

ஓடுநீர்க் கெதிரே நீடுநீர்ப் பரப்பது
பேரொலி தந்ததால் 'ஆர்கலி' என்றனர்.

---

* புழை – துளை.

*நீரது புணர நேர்ந்ததாற் 'புணரி';*
*பரந்து கிடத்தலின் 'பரவை'; எல்லை*
*வரையா நீட்சியால் 'வாரி'; உலகின்*
*வேலியாய்ச் சுற்றலின் 'வேலை'; எளிதில்*
*கடத்தற் கல்லதால் 'கடலே'; ஆழ்ந்த*
*ஆழம் உடைமையால் 'ஆழி'; மூன்று*
*மழையாற் றூற்றுநீர் மருவலின் 'முந்நீர்';*
*நலிப்பொலி தருங்கடல் 'நரலை'; வாய்பெறும்*
*உவர்ப்புச் சுவையதால் 'உவரி'யென் றுலகில்*
*அழைத்தனர்;*

*இவ்வா றருஞ்சொல் லமைத்த*
*அழகை, அறிவை அளக்க வொண்ணுமோ !*

*மலையும், காடும், மண்வள வயலும்,*
*அலைகட லும்மென அமைந்த நால்வகை*
*நிலத்த உலகதாம் 'நானிலம்' தன்னில்*
*பல்கிப் பெருகிய ஒல்காத் தமிழ்க்கடல்*
*சொற்களில் ஒருதுளி சொற்றனன்; முற்றக்*
*கற்றல் நமக்குக் கடனும்;*
*கற்க, கசடறக் கற்பவை; நிற்கவே !*

[நேரிசை
ஆசிரியப்பா.]

*திருமதி. சௌந்தரா கைலாசம்*

அவர்கள் வழங்கிய

**மதிப்புக் கருத்துரை:**

துள்ளி வருந்துயர்
கிள்ளி யெறிந்திடும் சொல்லமுதம்
அள்ளி வழங்கியோர்
ஆகம் தழுவிடும் அற்புதத்தை -
பிள்ளையைத் தெய்வமென்
றேயுணர்ந் தன்புடன் பேசிமனம்
கொள்ள யிடுங்கவி
கோவை யிளஞ்சேரன் கூறினனே.

[ஒ-ம்.] சௌந்தரா கைலாசம்.

# தவழும் தெய்வம்.

*வாலைக் குமரியை*
*வாழிய தாயென மாற்றுவதும்,*
*காளைக் குமரரைக்*
*காணிய தந்தையென் றுக்குவதும்,*
*சூலைத் துயர்தந்து*
*சோலையாய் வாழ்வினைத் தோற்றுவதும்*
*காலைக் குனித்தெழில்*
*காட்டித் தவழ்ந்திடும் தெய்வதமே.*

*'அத்தான்' எனுமலர்*
*அம்புமின் னூற்றலாய்ப் பாய்ந்தமொழி;*
*முத்தாக 'அன்பே'யென்*
*றத்தான் மொழிந்ததேன் தோய்ந்தமொழி*
*சொத்தை எனச்சொலச்*
*செய்திட 'அப்பப்ப' 'அம்ம'வென்றே*
*முத்திரைச் செம்மொழி*
*குத்திடுந் தெய்வமொன் றுடிடுமே.*

*பொன்னிற மின்னலைப்*
*'பொள்'ளென வென்றிடும் புன்னகையே!*
*கன்னச் சிறுசுழி*
*காட்டுமோ காவிரி நீர்ச்சுழியே?*
**பெண்ணை இளநீரும்*
*பெற்றதோ வாயினீர்த் தீஞ்சுவையே?*
*சின்னக் கருவிழிக்*
*கென்ன உவமைசொல், வெண்ணிலவே?*

* பெண்ணை – பனைமரம்.

*விண்ணதன் நீலத்தை*
*வெண்ணில வேற்றிட, வெண்ணிலவின்*
*தண்ணறு வெண்மையைத்*
*தாங்கிடும் விண்ணதில் மின்னலிட்ட*
*மின்னலுந் தங்கிக்*
*கிடந்திடில் மேவுறு வெண்மைவிழிக்*
*கண்ணை, மணியதைக்*
**கண்ணரிப் பொன்மையைக் காட்டிடுமே.*

*தண்டை இசையெனத்*
*°தண்ணுமை கிண்கிணி காட்டிவர,*
*பண்டி சரிந்தரை*
*நாண்மணி யாழிசை கூட்டிவர,*
*கொண்டைத் தலையதைக்*
*கோல மயிலென ஆட்டிவரத்*
*தொண்டையின் வாயினீர்*
*'தூய்தூ'யெனப் பன்னீர் தூற்றிடுமே!*

---

* கண் அரி – கண் இரேகை.
° தண்ணுமை – முழவு.

கோவை. இளஞ்சேரன்

உச்சியை மோந்திடின்
உள்ளம் கிளர்ந்தெழும்; ஒண்ணுதலை
நச்சித் தடவிட
நன்னரம் பின்புறும்; கன்னமதில்
'இச்சிச்' செனுமுத்தம்
என்னைக் குழைத்திடும்; வாயிதழின்
எச்சில் துளிபடின்
என்ன நிலையெனச் சொல்லுமுண்டே ?

வாழ்வில் முறுவல்
வழங்கிடா வன்கணர் வாய்மலரும்;
தாழ்வில் நலிந்து
தளர்ந்த உளமது தண்மையுறும்;
சூழ்வுறு காதற்
சுவையினுந் தானோர் மெருகொளிரும்;
யாழ்குழல் மெல்லிசை
யாவினும் மேன்மை மழலையதே.

[கட்டளைக்
கலித்துறைகள்.]

கவிதைகள்.

*திரு. மயிலை. சீனி. வேங்கடசாமி*

[முன்னாள் தலைவர், தமிழ் எழுத்தாளர் சங்கம்.]

அவர்கள் வழங்கிய

**மதிப்புக் கருத்துரை :**

திரு. கோவை. இளஞ்சேரன் அவர்கள் இயற்றிய "ஏட்டுச் சுரங்கங்காள்" என்னும் கவிதை ஆற்றொழுக்கு நடையும், இனிமையும், அழகும் உள்ளது. வெறும் கதைகளை மட்டும் எழுதுவதை விட்டுப் பலதுறைகளிலும் புதிய நூல்களை இயற்ற வேண்டுவது அறிஞர் கடமை என்று கூறுவது இன்றைய நிலைக்கு மிகப் பொருத்தமாகும்.

[ஒ-ம்.] சீனி. வேங்கடசாமி.

# ஏட்டுச் சுரங்கங்காள் !

*நூற்களை இயற்றிட அறிவுளீர்,*
*நூற்களில் புதியன இயற்றுவீர் !*
*நூற்களாய்ச் சிறுகதை, பெருங்கதை*
*நூற்பதை அளவொடு நிறுத்துவீர் !*
*நூற்களாய் அகநூல், அறிவுநூல்,*
*நுண்கலை வானநூல்; வாழ்வுநூல்,*
*நூல்வர லாற்றுநூல், உழவுநூல்,*
*நுவலுவீர், தமிழ்மொழி யொன்றினால் !*

தொழிலுக் குயர்வுநூல், பாடநூல்
        தொன்மைப் பொருளுறு நூற்களும்,
எழிலுக் குரியபல் நூற்களும்,
        எளியோர் வாழ்வகை நூற்களும்,
இழிவினை எரித்திடும் நூற்களும்,
        இனநல முயர்த்திடும் நூற்களும்,
ஒழிவிலா தியற்றுவீர்; அறிஞரீர்!
        ஒழுக்கமே நூற்களால் பரப்புவீர்!

இல்லாத நற்பொருள் பிறமொழி
        இயம்பிடில் தமிழினில் ஆக்குவீர்!
நல்லதோர் சொல்லினை உணர்த்திடும்
        நயமெனில் மொழிபெயர்த் திடுக,நீர்
செல்லாத நூற்கள் எவற்றையும்
        செல்லாத காசென ஒதுக்குவீர்!
இல்லாத தமிழரிங் கில்லென
        இயற்றுவீர் தமிழக நிலத்திலே!

*தொல்லறி வாளர்கள் ஆக்கிட்ட*
*தொன்னூல் நற்பொருள் வாய்ந்ததை*
*நல்லுரை எளிதென ஆக்குவீர்!*
*நலிவைப் பெருக்கிடும் பொருளெனில்*
*கல்லறை கட்டுவீர்! ஒலியிடுங்*
*கடலுடை உலகினில் தமிழகம்*
*வல்லர சாக்கிடும் வலியினை*
*வாய்த்துளீர், செயலினால் ஆற்றுவீர்!*

*மதர்த்துள தமிழறி புலவரீர்!*
*மடைதிறந் தனைய நும் அறிவினைப்*
*புதர்க்குளே பொதிந்தநன் மணியெனப்*
*புதைத்துமே வாழ்வதும் நாணமே!*
*இதற்கிது பொருளென, அன்றென*
*இடைமறுப் பெழுதியே நாளெலாம்*
*பதர்க்கென உழுவதை விட்டுநீர்*
*பயனுடைச் செயல்களே ஆற்றுவீர்!*

ஒருமுறை பயின்றபின் மூலையில்
ஒதுக்குதல் நூலெனத் தகுவதோ ?
தருசுவை தேனெனச் சுளையதன்
தெளிவெனத் தென்றலின் போக்கெனப்
பொருளுடை நூற்களே புதுக்குவீர் !
பொன்னெழுத் தெனுஞ்சொலை ஆக்குவீர் !
மருவிய எழுத்துளீர், மனங்கொளின்
மண்ணிடைத் தமிழகந் தாழ்க்குமோ ?

[அறுசீர் ஆசிரிய
விருத்தங்கள். ]

பேராசிரியர்
**க. அன்பழகன்** M. A., M. L. C.,
அவர்கள் வழங்கிய
**மதிப்புக் கருத்துரை :**

இயற்கை எழில் கற்பனையைத் தளிர்க்கச் செய்யும். அது சிந்தனையைச் சிறக்கச் செய்யும் ஆசான் அன்றோ! இயற்கை எழுப்பும் உணர்ச்சி வடிவந்தான் கவிதை. இளஞ்சேரன் தீட்டுகின்ற 'இயற்கை ஏடு' இயற்கைக்கே எழில் சேர்க்கும் கலை விருந்து; ஆம் கலை விருந்தேதான். விருந்தை அருந்தி மகிழ்க!

[ஒ-ம்.] க. அன்பழகன்.

# இயற்கை ஏடு.

*இரவினிலே விண்மீன்கள் விளக்காய்,*
*எண்ணிலவாய்ச் சிற்றொளியை வழங்க,*
*பரவொளிகொள் பகலவனே தனியே*
*பகல்விளக்காய் ஒளிர்வதற்கென் பொருளோ ?*
*கரவுதீது வஞ்சமதெண் ணிலவாய்க்*
*கலந்திருக்கும் மன்பதைகொள் குழுவில்,*
*விரவியநல் லறிவொன்றே சிறந்து*
*விளங்குமெனக் காட்டுவதன் குறியாம் !*

பல்லிதழ்கொள் மலர்களிங்கு மலர்ந்தே
பரந்திருக்க வெண்மையிலே, அலர்ந்த
மல்லிகையாம் மலரொன்றே தனியாய்
மணச்சிறப்பைப் பெற்றதற்கென் பொருளோ ?
பல்லுருவில் மக்களிங்கு மிகுவர்;
பயனற்ற வாழ்வதனைப் புரிவர்;
நல்லிசையைப் பெறுவதற்கே அணியாய்
நனிவேண்டும் பண்பெனுமோர் குறியாம் !

பல்வகையாய் மரமெல்லாம் இனிமைப்
பயன்தந்து நிற்குங்கால், ஒளிகொள்
பல்லுக்கே வேல்,ஆலம் இரண்டும்
பயனுறுதி என்பதற்கென் பொருளோ ?
வெல்லுவதே தன்மையெனப் பெரிதாய்
வெறிவாழ்வு கண்டாலும், இனிதாம்
சொல்லுக்குள் உண்மையினை நிறைவாய்ச்
சொரிந்துநிற்க வேண்டுவதன் குறியாம் !

ஒப்பில்லா இறையொன்றே அறிவாய்
ஒண்பொலிவில் நின்றிலங்கல் அறிந்தும்
குப்பைபோல் பலகடவுள் உருவாய்க்
குவலயத்தோர் கொள்வதெதன் குறியோ?
துப்பொன்றும் மெய்விட்டுக் கொடுமைத்
தீதாம்பல் பொய்கொண்டு சிறுமைத்
தப்பான வழிநடந்து மருளாம்
தற்குறியாய்த் தீர்வததன் பொருளாம்!

பொலிவுடைய பலபொருள்கள் சுவையாய்ப்
பொதிந்திருக்க இயற்கையதில் குவையாய்,
மலிவுதரும் முகில்கண்டு மயிலே
மகிழ்தோகை விரிப்பதெதன் குறியோ?
நலிவுகொண்ட மக்கட்கே வளமாம்
நறுவாழ்வை நல்லுரையால் நவின்று
வலிமைதரும் அறிஞர்க்கே விழாவாம்
வகைசெய்ய அறிவிக்கும் பொருளாம்!

[அறுசீர் ஆசிரிய
விருத்தங்கள்.]

கோவை. இளஞ்சேரன்

***திரு. பி. சி. கணேசன்*** B. Sc., B. T.

அவர்கள் வழங்கிய

**மதிப்புக் கருத்துரை :**

கருத்தாழம், சொல்லாட்சி, ஓசைநயம் ஆகிய முக்கோண ஒருமைப்பாட்டிலே இயங்குவது கவிதை. அந்தக் கவிதையும் வெறும் காலக் கண்ணுடியாக அமைந்து விடாமல், காலத்தை இயக்கவல்ல கருவியாக அமைந்து விடுமானுல், இலட்சிய இலக்கியமாகி விடுகிறது. நண்பரின் இக் கவிதை அந்தப் பகுதியைச் சேர்ந்தது.

[ஒ-ம்.] பி. சி. கணேசன்.

# படைஞர் [இராணுவ] ஆட்சி.

*சிரித்தனையோ கொல்லைவளர் முல்லாய்;*
*சிக்கடுத்த அரசியலை யெண்ணி,*
*விரித்தனையோ இதழ்க்கட்டை முல்லாய்;*
*விரித்தவலை ஆட்சிதனில் பல்லோர்,*
*அரித்துவருங் கறையானுய் மாறும்*
*அதுபொழுதாய்ப் படைஞரவர் ஆட்சி*
*கறித்தெழுதல் நினைத்தனையோ; அல்லால்,*
*'களுக்'கென்றே ஏன்சிரித்தாய் சொல்லாய்.*

படையொருகை *கோலொருகை கொண்டே
படைஞரவர் ஆட்சியெழுந் திட்டால்,
புடைபெயரும் பெருந்தலைகள் சாயம்
'பொள்'ளெனவே வெளுப்பதைநீ னைந்தோ,
தடையதுவுங் குடைவதுவும் வீணே
தாக்குவதால் தளர்ந்தபொது மக்கள்
தொடைநடுங்கும் நிலைநினைந்தோ முல்லாய்,
தொடர்ந்தவெடிச் சிரிப்புற்றாய் சொல்லாய்?

'ஊர்பறிக்கும் வணிகரவர் மிக்கார்;
'ஊதாரி'ச் செலவினத்தார் ஆள்வோர்;
நேர்மையதை விற்றுவளர் செல்வர்;
நெடுந்தூக்க மந்தைகளாம் மக்கள்;
பேரிவற்றின் அறிகுறியே கண்டீர்,
பெரும்படைஞர் ஆட்சிமூண்ட' தென்றே
ஊர்சிரிக்க நீசிரித்தாய் போலும்!
உன்சிரிப்பை அடக்கவர்க் கேலும்?

[அறுசீர் ஆசிரிய
விருத்தங்கள். ]

* கோல் — ஆட்சி.

வித்துவான்

**ந. இராமநாதன் B.O.L. அவர்கள்**

வழங்கிய

மதிப்புக் கருத்துரை :

நண்பர் திரு. கோவை. இளஞ்சேரன் அவர்களது "தமிழா கேள்" கவிதையினைப் படித்து இன்புற்றேன். கவிதை செஞ்சொற்களாலமைந்துள்ளன. தமிழர் வாழ்வு 'துருப்பிடித்துதிர்ந்த இரும்'பெனவும், நோய்க்கிருமிகளால் 'துளையிடப்பட்ட எலும்'பெனவுமுள்ளதெனக் கூறும் உவமை நயம் சிறந்தது; புதியது; கருத்தாழமுடையது.

[ஒ-ம்.] ந. இராமநாதன்

# தமிழா கேள்!

*திண்ணிய என்றன் தமிழா,கேள் !*
*சிலசொல் தருவேன் எண்ணிப்பார் !*
*எண்ணத் தெழுந்த விடையெதுவோ,*
*எடுப்போ ததனை இயற்றிடுவாய் !*
*திண்ணம் செறிந்த உளத்துடனே*
*திரண்டு, முயன்று செயல்புரிவாய் !*
*மண்ணில் மலையே எதிர்த்திடினும்*
*மலைக்கா தேநீ விரைந்தெழுவாய் !*

புதுமைக் குடியாய்ப் புகுந்தவர்கள்
புன்மை மொழிகள் வளர்க்கின்றார்;
ஒதுக்கி யுன்றன் உயர்மொழியின்
உருவைக் குலைப்பார் உலைவைப்பார்,
மதுவின் குழியில் வண்டெனவே
மயக்க வழியில் வளர்கின்றாய்,
புதுக்கி யுன்றன் தமிழ்மொழியைப்
புனைய வேண்டும் முனைந்தெழுவாய்!

நம்மை உயர்திணை யாக்கியவள்
நந்தாய் மொழியாந் தமிழன்றோ?
செம்மை நிலையில் அவட்பேணல்
சேயாம் நமது கடனன்றோ?
மும்மைத் தமிழும் ஆள்வோரே
முனைந்து வளர்க்க வேண்டுமென
அம்மை மீதில் ஆணையிட்டே
அறிவித் தியக்க முயன்றிடுவாய்!

பிழையில் லாத உச்சரிப்பும்,
பிறழ்வில் லாத எழுத்ததுவும்,
விழைவாய்த் தமிழைக் கற்பதுவும்
விளங்குந் தமிழ்க்கே தொண்டாகும்.
புழைவாய்ச் செடியாய்த் தமிழ்வாடப்
புன்மைச் சில்லோர் கீழறுப்பாய்
நுழைவார் செயலை நூக்குதலும்
நுவலுந் தொண்டென் றுணர்வாயே!

அடுத்து வந்தோர் அடாப்பழக்கம்
அவ்வப் படியே கடைப்பிடித்துக்
கெடுத்தே விட்டாய் தமிழ்வழக்கே!
'கேலி'க் கிடமே கொடுத்திட்டாய்!
படுத்தல் ஒன்றிற் பணிவதன்றிப்
பணிதல் ஒரும் தமிழா, கேள்!
எடுத்தே யுள்ளாய் என்பதன்றிக்
கொடுத்த துண்டோ; இதுநன்றோ?

*திருக்குறள் முழுதுங் கற்றிடலால்*
*திருந்திய வாழ்வே பெற்றிடலாம்;*
*'உருப்படி மனிதர் தமிழ்'ரென்றே*
*உலகில் திகழக் குறள்துணையாம்;*
*துருப்பிடித் துதிர்ந்த இரும்பென்றே,*
*துளையிடப் பட்ட எலும்பென்றே,*
*இருப்பது தமிழர் பண்பன்றே;*
*இனியுந் தாழ்க்கல் இடரன்றோ ?*

[அறுசீர் ஆசிரிய
விருத்தங்கள். ]

கோவை. இளஞ்சேரன்

குழந்தைக் கவிஞர்

***அழ. வள்ளியப்பா அவர்கள்***

வழங்கிய

**மதிப்புக் கருத்துரை :**

நற்கருத்துக்களை நன்முறையில் எடுத்துக்கூறும் ஆற்றல் மிக்க கவிஞர் திரு. கோவை. இளஞ் சேரன் என்பதை அறிந்து மகிழ்ந் தேன். அவரது இக் கவிதை இன்பம் தந்தது; எண்ணத் தூண்டியது: அவரது கவிதா சக்தி வாழ்க ! வளர்க !

[ஒ-ம்.] அழ. வள்ளியப்பா.

# மே தினம் -
## ஓர் எச்சரிக்கை.

*படுக்கைக்கே ஒய்வளித்து மச்சா ளோடு*
*பண்ணையர்க்கே வாழ்வளிப்பாள்; அவள்வாழ் விற்கோ*
*வடுக்களையே பரிசாகப் பெற்றி ருப்பாள்;*
*வளமெல்லாம் படைத்திடினும் உரிமை யின்றி,*
*அடுப்பினிலே நெருப்பேற்ற வகையு மின்றி*
*அடிவயிற்றில் நெருப்பேற்றி அயரும் நாளில்*
*'அடுக்காது கொடுமை'யென அலறுகின்ற*
*அந்நாளில் மேதினத்தின் வாடை வீசும்!*

"கரம்பையினைப் பண்படுத்திக் கழனி யாக்கிக்
கணக்கில்லாப் பொருள்குவித்துக் கனிந்த நாங்கள்
நிரம்பாத மூளிகளாய் நிலவும் போதில்,
நிலவொளிபோல் உடலமைந்த நீவிர் சில்லோர்
வரம்பில்லாச் சுவைபெறுதல் ஏன்ஏன்" என்றே
வல்லுழவர் கேட்டுவிடின் வளைந்த அன்னார்
நரம்பெல்லாம் முறுக்கேறித் துடித்துப் போகும்;
அத்துடிப்பே மேதினமாய் வெடித்துப் போகும்!

பல்லிளித்து வந்தவர்கள் பதவி பெற்றுப்
பழையவரைச் சுரண்டலொடு தாழ்த்து கின்ற
பொல்லாங்கு தீரத்தம் வாழ்வு வேண்டிப்
பொங்கியெழுந் தாழ்ந்தவரின் கிளர்ச்சி யெல்லாம்
வெல்லவரும் மேதினத்தின் மறு பதிப்பாம்,
வளவாழ்வில் தருக்கிநிற்பீர்! தாழ்ந்த வர்கள்
சொல்லுகின்ற மேதினத்தின் செய்தி உங்கள்
செழிப்புக்கே எச்சரிக்கைச் செய்தி யாகும்!

*"நிறையீட்டால் குறைதவிர்க்கும் எங்கள் வாழ்வின்*
*குறையீட்டைத் தகர்த்திடுமின்" என்று ழைப்போர்*
*அறைகூவி நெஞ்சமுகிக் கூறு கின்ற*
*முறையீட்டைப் புறக்கணித்தல் மடமை யாகும்,*
*முறையீடு முறைப்பாடாய் மாறிப் பின்னர்*
*முறைப்பாடும் தாக்கீதாய் மீறிப் போனல்*
*சிறையீட்டின் தலையீடு செல்லா தாகும்;*
*சொல்லிவைத்தோம்; மேதினந்தான் வெற்றி சூடும்!*

[எண்சீர் ஆசிரிய
விருத்தங்கள், ]

திருப்பெருந்திரு
*குன்றக்குடி அடிகளார்*
வழங்கிய
**மதிப்புக் கருத்துரை:**

எளிமையும் இனிமையும் நிறைந்த கவிதைகள் ஆழமான கருத்துக்களும் நிறைந்த கவிதைகளாக இருப்பது பாராட்டத்தக்கது. " நீரோட்டம் " கவிதைகள் நல்ல அமைப்பு; அனுப விக்கத்தக்க அமைப்பு. தமிழன்பர் கள் படித்து இன்புறும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றேன்.

[ஒ-ம்.] தெய்வசிகாமணி.

# நீரோட்டம்.

*''குடைநிழல் இருந்து குஞ்சரம் ஊர்ந்தோர்*
*நடைமெலிந் தூர்தொறும் நண்ணுவர்'' எனப்பெரும்*
*படையுடைப் பாண்டியன் பகர்ந்த நிலையினை*
*அடைந்தேன், யானுமோர் அவலப் பெண்ணே.*

*சிறந்தபல் பொருள்களுஞ் சீர்த்தியுங் கோண்டதே*
*பிறந்தக மெனக்குநான் புக்கக மோவெனில்*
*மறந்திடா துள்ளளவும் மதிக்க இடுவதைக்*
*கரந்திடும், முத்தையுங் கனிந்திடும் இடமதே.*

எவ்விடம் பிறந்தென்; எவ்விதஞ் சிறந்தென் ?
செவ்வி ஒழியவே 'சிக்'கெனத் துன்பம்
கவ்வி உடலெலாங் கருகிட, வாழ்வினை
வவ்விட ஆயினேன், வன்னியில் மெழுகதே.

இன்னுமென் துயரினை இயம்பிட முற்படின்
மின்னுமும் கண்களோ அருவியை ஈன்றிடும்;
குன்றுமென் நிலையால் குன்றொடு கொடுமையும்
கன்றும்; கேளுமென் கதைக்குடங் கவிழ்ப்பனே:

நீந்தவுந் திரியவும் நிகழ்த்தாது குஞ்சினை
ஏந்தலும் இலாமல் இறக்கிடும் மீன்போல்,
நேர்ந்தவென் அன்னையும் நேயமாய் என்னையே
ஈந்தனள் உலகினுக் கியற்றிடப் பணியதே.

நள்ளிருட் டினிலும், நடுவெளி யினிலும்
தள்ளிப் பின்னுளோர் தருக்கொடு முடுக்கவே
வெள்ளித் திவலையான் வீழ்ந்துவர லானேன்,
துள்ளிக் குதித்திடுந் துணிகன் றெனவே.

கற்களின் மேலெலாங் கடுகவே வீழ்ந்து
சல்லிகள் உருட்டியுஞ் சந்தெலாம் புகுத்தும்
'ஒல்'லென உருண்டமை ஒழிந்திட நிலத்தில்
மெல்லவே நடந்தேன், பள்ளங்கள் தேடியே.

'சலசல' வொலியொடு 'சிலுசிலு' எனவே
'கலகல' எனவே கவிந்துங் குவிந்தும்
பலபல நாட்களாய்ப் பகலோ டிரவும்
நிலவுல கதன்மேல் ஓடினேன், நெளிந்தே.

கெட்ட குடியேசீர் கெட்டு வருதலாய்,
எட்டிய இடமெலாம் எமனே சூழ்ந்திடச்
சட்டியுஞ் சகதியுஞ் சார்ந்தே படிந்திடக்
கட்டிளை யோர்முதற் கிழவருங் கலக்கவே,

அடியிடம் அல்லலென் றசைந்துமேற் சேர்ந்து,
கடியதீ உதைப்பக் கலங்கி, இடையே
நெடியவே ஓட்டமாய் நெஞ்சம் பதறிட,
மடியவே எண்ணி மனஞ்சலித் தலைந்தனே,

துன்பக் காட்டினில் இன்ப மலர்ச்சியாய்
என்பிலா நங்கையென் ஏழ்மைக் கிரங்கி
அன்பினால் அதிர்த்துடன் அலைகளை அனுப்பும்
என்பெரும் புக்கக இருப்பிடங் கண்டே,

ஆர்வம் பொங்கிட அசைந்தே நகர்ந்து
சோர்வெலாம் விலகிடச் சேர்ந்தேன் அவ்விடம்;
சார்வதால் நன்மையே சாருமென் றெண்ணினேன்;
ஊர்வலம் வந்ததில் உற்றதே பெற்றனே.

நல்லார் நாவினில் நனைத்திடில் துப்புவர்;
வல்லார் பலரிடம் வணங்கும் வேலையோர்;
கல்லார் கூட்டம் கற்றுரை ஒதுக்கலாய்ப்
புல்லா தென்னையே நிறுத்தினர் புறத்தே.

தனித்து நின்றதால் தக்கதாய் வெடுத்தேன்;
இனித்தடை இல்லையென் றிரும்பெருங் கருநிற
நனித்துவர்க் கடலும் நன்றெனச் சேர்த்தது;
குனித்துத் திரையுடன் குலவினேன் பேசியே.

"ஆண்பால் இல்லையே யாருமிங்" கென்றேன்
"மாண்பாங் காதலும் மகிழ்ச்சியுந் தருபவன்
காண்பாய், வருவான் காலைகொண்" டென்றனர்;
வீண்போக வில்லைவந் தனன்கதி ரவனே.

காட்டினன் பொன்னுடல்; ஊட்டினன் காதலை;
தீட்டிய அழகும் தெவிட்டான்; ஆயினும்,
நாட்டிடுந் தொழிலோ காட்டொளிர் தீயாம்;
ஆட்டமும் அழகுநஞ் சார்ந்தபாம் பிடத்தே!

வருவதை அறிந்ததும் வணங்கியே நாணினேன்;
பருவம் அறிந்தவன் பொற்கையாற் பற்றியே,
உருவிலி யாக்கி உயரக் கொண்டுபோய்
'இரு'வெனக் கூறினன்; இருந்தேன் பாங்கிலே.

விருப்பினல் என்றவன் விழைந்தெனைப் பற்றியே
நெருப்பினைக் கக்கினன்; நெக்குவிட் டுடலெலாம்
கருப்பாய்க் கருகிடக் கருப்பமும் உற்றதால்,
விருப்பாய்த் தோகையை விரித்தன மயில்களே.

'நாலாம்'பே ரறியா நங்கையா யிருந்தேன்;
கோலா கலத்தாற் கொண்டிமா டாக்கிக்
*காலாம் வண்டியைக் காட்டித் தாயகம்
'மேலாய்ச் சென்றுவா' என்ருன் மணுளனே.

அன்னமாய் இருந்தநான் °அண்டங் காக்கையாய்,
இன்னிசை ஒலிபோல் இடிக்குரல் ஒலியாய்,
அன்னையென் றழைத்தவர் அரக்கியென் றேசிட
நன்னயம் இழந்து நலிவுற் றலைந்தே,

காற்றெனுங் கூற்றுவன் காலால் உதைத்துத்
தூற்றியே தள்ளித் 'தூ'வென் றுமிழ
நாற்றிசை எங்கணும் நாயாய்த் திரிகையில்
மாற்றிலா அன்புகொள் மலைகண் டணுகியே,

''அன்ஞய்'' என்றவள் அருந்தாள் நோக்கினேன்;
''பெண்ணே'' என்றெனைப் பொறுத்தனள் தலைமேல்;
தன்னேர் இலாத தாய்மடிக் குழவியாய்த்
துன்னியே படிந்து தூங்கினேன் அயர்ந்தே.

---

* காலாம் வண்டி — காற்ருகிய வண்டி; கால்நடை.
° அண்டங் காக்கை — கருங்காக்கை; உலகத்தைக் காப்பாற்றுபவள்.

வெப்பத் திணலே வெந்ததென் உடலெனச்
செப்பியே *கருநோய் செகுத்திட அன்னையும்
ஒப்பியே அழைத்தனள் உயர்தண் தென்றலை;
தப்பா தடைந்தெனைத் தழுவியே நின்றதே.

உண்மை ஒளியாற் பொய்யிருள் அகறல்போல்,
திண்மை பிறந்ததுந் திகைப்பெலாம் அறுதல்போல்
தண்மை அணுகவுந் தீநோய் பறந்திட
வெண்மை பெற்றுடல் 'வெலவெல'ப் படைந்தே,

இன்னதென் றென்னால் இயம்ப இயலா
தென்ன தகமெலாம் அயர்வதை யறிந்தேன்;
''தன்னலங் கருதாத் தக்கோர் தோன்றிட
உன்னிடங் குறி''யென உரைத்தனள் அன்னையே.

குடியாய்க் கொண்டு குளிரெனை வாட்டப்
பிடியாய் நடுக்கம் பிடித்திடப் பசும்பொன்
°தடியாய் மின்னல் 'தகர்ப்பேன்' எனஅஞ்சித்
துடியாய்த் துடித்தே இடியாய்க் கத்தியே,

---

* கருநோய் – கருப்பம்; கருமையாகிய நோய்.
° தடி – தடிக்கம்பு; மின்னல்.

கோவை. இளஞ்சேரன்

குலையைத் தள்ளியே குலைந்திடும் வாழைபோல்,
கொலைசெய் கருவியாம் அழகமை மலர்போல்,
விலையிலா மக்களை விண்ணின்று மாரியாய்
மலையினிற் பொழிந்து மறைந்தொழிந் தேனே.

விண்ணெலாம், நிலமெலாம் வெருவியே நடந்ததால்
எண்ணிலாத் துன்பங்கள் எய்தினும், என்னுல்
மண்ணுளோர் வளமெலாம் மலிந்து மகிழ்வதை
எண்ணினேன், உண்டேன் ஈத்துவக்கும் இன்பமே.

நீரெனத் தோன்றினேன்; ஆறென ஓடினேன்;
வாரலைக் கடலென வளர்ந்தேன்; ஆவியாய்
நேரிலா முகிலாய் நேர்ந்தேன்; வாழ்த்திடப்
பாரெனும் மடந்தைக்குப் படைத்தேன் மழையே.

[கலி விருத்தங்கள்]

*கலைஞர். மு. கருணாநிதி* M. L. A.

அவர்கள் வழங்கிய

**மதிப்புக் கருத்துரை :**

நகைச் சுவை நல்லதோர் கொள்கை பரப்பும் கருவி. அதனைக் கவிதையிலே கையாளுதல் கவிஞரின் திறமைக்கோர் எடுத்துக்காட்டு. தமிழ் எழுதுவோரைச் சீர்படுத்தும் நோக்குடன் தமிழ்த் தொண்டாற்றும் கவிஞர் இளஞ்சேரன் இப்பணியினை எல்லா வகையிலும் தொடர்ந்து செய்ய வேண்டுகிறேன்.

[ஒ-ம்.] மு. கருணாநிதி.

# பிழை ஒரு கொலை!

*எம்பெருமான் திருவருளால் ஒருவர்*
*எழில்மகட்கே மணமுடிக்க எண்ணி*
*அன்பழைப்பை அச்சேற்றக் கொடுத்தார்;*
*அச்சகத்தார்* எம்பெருமான் *சொல்லில்*
*முன்பமைந்த புள்ளியதை விட்டார்;*
*முழுத்தத்தில்* எமபெருமான் *நின்றார்.*
*பின்பொருவர் வாழ்த்துவதற் கெண்ணிப்*
பெருகிவாழ்க காவிரிபோல் *என்றே,*

*எழுதுங்கால் ழகரத்தின் புள்ளி*
*எட்டவைத்தார்; வாழக்கா விரியாய்ப்*
*பழுதாகிப் போயிற்று காண்பீர்!*
*பைந்தமிழிற் புள்ளியொன்று தள்ளின்*
*முழுதுமந்தப் பொருள்மாறிப் போகும்;*
*முனைப்பான கருத்தெழுத்திற் கொள்ளின்*
*அழுதுனையுந் தமிழமுதாய் வாழும்;*
*அதையருந்தித் தமிழினத்தார் வாழ்வர்.*

*ஆங்கிலத்தில் (T)'ட'யோடு (D)'ட'யாம்*
*ஆயிரண்டின் ஒலிமாற்றம் அறிந்து*
*தீங்கின்றி உச்சரிப்போம்; அன்றித்*
*தெருவிளக்குக் கம்பம்போல் (T)'ட'யாம்*
*வாங்கிவைத்த வில்லு'ட'(D) என்றே*
*வழங்கினமோ, உருவத்தைக் கொண்டே?*
*பாங்குற்ற ணகரமொடு னகரம்*
*நகரத்தோ டொருமூன்றும் எழுத்தை.*

'மூன்றுசுழி இரண்டுசுழி இந்'தென்
றுச்சரித்தோம் சுழிபார்த்த மாடாய்;
ஆன்றநம தருந்தாய்மை மொழியே
ஆக்கமுற நுணுக்கமறிந் துரையோம்;
தோன்றுபிற மொழிநுணுக்கங் கண்டோம்.
டண்ணகரம், றன்னகரம் என்றும்
சான்றமைந்த தந்நகரம் என்றும்
சார்பறிந்து வழங்கல்தமிழ்த் தொண்டாம்!

என்புருக்கி நோய்நீக்கும் ஒருவன்
எடுப்பான மூலிகையொன் றறிந்தே
துன்படக்கிப் பிணிதீர்த்து வந்தான்;
தொலைவில்வாழ் பிணியாளன் ஒருவன்
"அன்பையா! மருந்தெழுதி விடுப்பீர்;
அங்குவர இயலாதேன்" என்றான்;
தென்பாங்குத் தமிழெழுத்தின் நுணுக்கம்
தெரியாதான் மருந்தெழுதி விடுத்தான்.

முடங்கலதைக் கண்டபிணி யாளன்
முள்கண்ணில் குத்தியதாய் அதிர்ந்தான்;
'அடங்கவேண்டும் நோ'யென்று துணிந்தே
அரிவாளைக் கூர்முனையாய்த் தீட்டித்
தடங்காணு வைகறையில் ஆற்றின்
தண்கரையில் மந்திரத்தை ஓதத்
தொடங்கியவர் ஆடாத தலையைத்
துணித்தோடி வந்தில்லம் புகுந்தான்.

நாற்பத்தெண் பங்காக்கி, எலும்பை
நறுக்கியெறிந் துண்டும்நோய் தீரான்;
''கூர்ப்படையால் கொலைசெய்தேன் பாவீ!
குறையவில்லை பிணி''யென்றே வரைந்தான்.
நேர்ப்பட்ட மருத்துவன்''என்'' என்றான்.
''நின்சொல்லால் ஆடாத தலையைத்
தீர்த்த''னென்றான்; ''ஆடாதழை யன்றோ
தீர்க்கு''மென்றான்; ''தழைதலையாய்க் குறித்தாய்;

பகைநேர்ந்து பழியாயிற்'' றென்றான்.
பற்காட்டிக் கிடந்தமண்டை ஓடு
நகைப்பதற்கே முடியாமல் இவர்கள்
நலிசெயலின் பழிகாட்டிற் றன்றே.
நகைச்சுவைக்கே இக்கதையைச் சொன்னேன்;
நடவாத கதையெனினும் இதுபோல்
பகையேதும் விளைந்திடலாங் கண்டீர்!
பைந்தமிழிற் பிழைசெய்தல் பீழை!

[அறுசீர் ஆசிரிய
விருத்தங்கள்.]

*திரு. மு. ரா. பெருமாள் முதலியார்* M.A.,L.T.,
[முதல்வர், ஆசிரியர் கல்லூரி, சைதை.]
அவர்கள் வழங்கிய

**மதிப்புக் கருத்துரை:**

புலவர் கோவை. இளஞ்சேரனார் சிறந்த இலக்கண இலக்கிய அறிவுடையவர், செந்தமிழ்க் கவிதைகளை இயற்றும் ஆற்றலர்; பயிற்சியர். "புதுமையாய் யாதொன்றும் புகன்றே னில்லை; புரிந்ததற்கே கவிதை யொரு கேற்றித் தந்தேன்" —என்று கல்வித்துறையில் மாணவர்க்கும், பெற்றோர்க்கும், மற்றோர்க்கும் உள்ள கடமைகளை ஆற்றொழுக்காய் ஓடும் பைந் தமிழ்க் கவிதை நடையில் வற்புறுத்துகின்றார்.

[ஒ-ம்.] மு. ரா. பெருமாள்.

# அறிக்கை ஒன்று.

*என்நாட்டுப் பெரியோரே! அன்னை மீரே!*
*ஏறுகளே! மாணவன்மீர்! எளியேன் உங்கள்*
*முன்நாட்டும் அறிக்கையொன்று கொண்டேன்; அஃது*
*முத்தொளியாம் சொத்தையன்று கேளீர், நல்லீர்!*
*பொன்னேட்டில் எழுத்தென்னும் வைரக் கல்லால்*
*பொருள்செதுக்கிப் பேரறிவில் திகழ்ந்த, நந்தம்*
*தென்னாட்டுக் கல்விநிலை கடல லையாய்த்*
*தேய்கின்ற கதைகேளீர், தேம்பிச் சொல்வேன்!*

பெற்றெடுத்த தந்தையரே, 'மைந்தர் தம்மைப்
பெரும்பள்ளி தனிற்சேர்த்து விட்டோம்; அன்னூர்
கற்றிடுவார்; கற்பிப்பார்' என்றே நீவிர்
கருத்தின்றி அமையாதீர்; பள்ளி விட்டால்
சுற்றுகின்ருர் - அலைகின்ருர் - திரிகின் ருரால்;
சுருக்கென்று தைக்கின்ற அன்புச் சொல்லால்
மற்றவரை வீடடக்கிப் பயில்நே ரத்தில்
மல்லிகைமுன் வண்டெனவே பயில வைப்பீர்!

பள்ளிதனில் ஆசிரியன் பயிற்று விப்பான்:
படிப்பிக்கும் வீட்டாசான் பெற்ருே ரன்ருே?
துள்ளிவரும் சேயவனை ''இன்றைப் பாடம்
துவக்கிவைத்தார்; விளக்கதனை'' என்பீர்! அன்பை
அள்ளிவிடும் அன்னையரே, நும்பால் உண்டே
அறுசுவையாங் கடிவாளம்; அதனைக் கொண்டே
தெள்ளுகல்வி வண்டியிலிக் குதிரை பூட்டிக்
கொள்ளருந்தப் பின்செய்வீர்; கொழித்து வாழ்வான்.

படிக்கின்ற மாணவர்க்குத் தோழர் காள்;நீர்
படிப்புணர்ந்தோர் ஆயிடினும், ஊரின் மூலே
முடுக்கெல்லாம் 'பதம்'பார்ப்போ ராயி னும்கண்,
முகம்மறைக்கும் இரவுவரின் நண்பன் தன்பால்
வெடுக்கென்று "போய்ப்படிபோ" என்றே சாற்றி
வெருட்டிடுவீர் விளையாட்டு நேரம் வந்தால்,
துடுக்காய்ச்சென் றிழுத்துவந்து தழுவி நின்றே
தோழனுக்கு நல்லவனாய்த் தோள்கொ டுப்பீர்!

புதுமையாய் யாதொன்றும் புகன்றே னில்லை;
புரிந்ததற்கே கவிதைமெரு கேற்றித் தந்தேன்.
இதுநிகழ்ந்தால் இளைஞர்நிலை உயர்ந்தி டாதோ?
இனியவரே, இயற்றிடுக! மாண வர்காள்;
முதுநாட்டின் விழுதுகளே! விடியற் போதில்
முளைகின்ற படிப்பதுதான் வேராய்ப் பாயும்;
அதுகொள்க! தாய்நாடு சிறக்க, நீவிர்
அருந்தொண்டு செயல்வேண்டும்; அறைவன் கேளீர்!

எழுத்தினிலே சிறுபிழையுந் தவிர்க்க வேண்டும்!
எடுப்பான தமிழ்ச்சொல்லிற் பேச வேண்டும்!
பழுத்தசுவைத் தமிழ்ச்சொல்லிற் பாகே உண்டு;
பார்த்தெடுத்துச் சுவைத்ததனை வழங்கல் வேண்டும்!
இழுத்திழுத்துப் பிறமொழியைக் கலக்கும் அந்த
இழிசெயலை விடவேண்டும்! உலகோர் நும்மை
வழுத்துவதற் காங்கிலத்திற் புலமை கொள்க!
வாழ்க்கைக்குக் குறள்கொண்டு நீடு வாழ்க!

நாட்டினிலே நல்லவர்கள் பெருக வேண்டும்!
நல்லவர்கள் சொல்லறிந்து நவில வேண்டும்!
நீட்டுகின்ற சொல்லதனின் பொருளை றிந்தால்
நிரம்பைக்கும், இடும்பைக்கும் நிகழ்வே யில்லை;
தேட்டவளத் தமிழகத்தில் தோன்றுந் தாழ்வு
தேனுளத்திற் சுரக்கின்ற சொலினுல் தேயும்;
கோட்டமிலாப் பொருளமைத்துக் குவிக்குஞ் சொல்லால்
கோடானு கோடியின்பங் குவித்து வாழ்க!

[எண்சீர் ஆசிரிய
விருத்தங்கள், ]

கோவை. இளஞ்சேரன்

முதுபெரும் புலவர்
*மயிலை. சிவமுத்து அவர்கள்*
[தலைவர், மாணவர் மன்றம், சென்னை.]
வழங்கிய

**மதிப்புக் கருத்துரை :**

கோவை இளஞ்சேரன்
கோத்தளித்த பாமாலை
தேவைநம் மாணவர்தம்
சிந்தனைக்கே;—பூவைநிதம்
மோந்தளிக்கும் வண்டின்
முயற்சியிது; வாழ்ந்தொளிர்க,
தீந்தமிழாம் மாணவர்பத் தே !

[ஒ-ம்.] மயிலை. சிவமுத்து.

# மாணவர் பத்து.

*மாண்பினை ஆக்குவோர் மாணுக்கர்; இச்சொலை*
*மாண்புறு சான்றோர் வகுத்தனர் - காண்தகு*
*மாணவர் என்பவர் மாண்பினை ஆக்கியே,*
*ஆணவம் ஆழ்த்திவாழ் வோர்.*

*வாழ்வோர் இசைவிழா; வாழ்வில் இளமையோ*
*தாழ்வில் தமிழிசைப் பாடலாம் - யாழ்படு*
*தேனிசை என்னத் தகுவதே, மாணவர்*
*வானிசைத் தேன்பரு வம்.*

பருவத் துடிப்பது பள்ளிப் படிப்பில்
உருவிடப் பாய்தல் உயர்வாம்; - திருவுடைத்
தாய்மொழி யோடொரு தாழ்விலாப் பார்மொழி
வாய்மொழி தோய்ந்திடல் வாக்கு.

வாக்கிற் பணிவொடு, யாக்கைத் துணிவொடு
நாக்கில் தமிழும் நயந்திட - 'நீக்கரும்
ஏந்தல் இவ'னென ஏகாப் புகழதே
ஏந்தும் இருகை எடுத்து.

எடுத்த குரலும், மிடுக்கு நடையும்,
உடுத்த உடையில் ஒழுங்கும் - தொடுத்த
படிப்பில் உயர்வும், பழக்கிற் பணிவும்
நொடிப்பிற் செயலும் நுகர் !

நுகர்நேரம் பொன்போல் நுகர்ந்து, பகலோன்
நிகர்பெருமை ஆசான் நிழலாய்ப் - பகலிற்
படித்தவை கங்குலிற் பார்த்துப் படுத்து
விடியற் பொழுதில் விழி !

கோவை. இளஞ்சேரன்

விடியற் பொழுதில் விழித்துப் பயிலின்
கடிதிற் படிந்திடுங் கல்வி; - படித்தவை
ஓய்விற் படுக்கையில் ஓர்ந்துசிந் தித்திடத்
தூய்தாய் அறிவூன்றும் கால்

காலைப் படிப்பும், கடமைத் துடிப்பொடு
மாலைக் குதிப்பும் மருவிட - வாழைக்
குருத்தின் வளர்வும், திருத்த அறிவும்,
எருத்தின் வலிவும் எழும்

எழும்பொது நூற்கள், எழுஞ்செய்தித் தாட்கள்
பழம்பே ரிலக்கியப் பாடல் - உளம்புக
நாடியே கற்றிடும் மாணவர், நாடெனும்
ஏடதிற் செம்பொன் னெழுத்து.

எழுத்துப் பிழையோ கழுத்துறு புண்ணும்;
கழுத்துறு புண்ணொரு கூற்றும்; - பழுத்தநல்
தேன்தமிழ் வாழ்ந்திடத் தேர்பிழை நீக்கியே
மாந்திடல் மாணவர் மாண்பு.

[நேரிசை வெண்பாக்கள்
மண்டலித்த அந்தாதித் தொடை.]

பேராசிரியர்

***வித்துவான். அ. கிருட்டிணமூர்த்தி***

M.A., B.L., B.O.L. (Hons.), Capt. N.C.C. Rifles.

[தமிழ்த்துறைத்தலைவர், அரசினர் கல்லூரி, குடந்தை.]

அவர்கள் வழங்கிய

**மதிப்புக் கருத்துரை :**

புலவர் கோவை. இளஞ்சேரனுர் வகுத்த பள்ளி நாற்பது, குறள் நாற்பதாக அமைந்திருக்கிறது. பாக்களில் இனிமையும், எளிமையும் பொருந்த இன்றைத் தேவைக் கேற்ப மாணவர்க்குத் தந்த நாற்பது மலர்கள் இவை. "மாணுக்கன் எனும் சொற் பொருளுக் கிலக்கியம் தாஞகி நிற்றல் தலை" என்னும் பாவிலமைந்த செப்பலோசை யும், பொருளும் சுவைக்க இனிக்கின்றன.

[ஒ-ம்.] அ. கிருஷ்ணமூர்த்தி.

# பள்ளி நாற்பது.

## மாணுக்கன்.

*'மாண்பினை ஆக்குவோன் மாணுக்கன்' என்றநம்*
*ஆன்றவர் நற்பொருள் ஆக்கு!*
*மாணுக்கன் எனுஞ்சொற் பொருளுக் கிலக்கியம்*
*தாஞகி நிற்றல் தலை.*

## பண்பாடு.

*'வணக்கம்' எனக்கை குவித்துவாய் ஆர*
*இணக்கமாய் ஆசாற் கியம்பு!*

*சூழ்நிலை, காலம், சுவைச்சொல் உணர்ந்துநன்*
*காழ்ந்து பழகல்பண் பாடு.*

## பல்லொரு முத்து.

பல்லொரு முத்தாய்ப் 'பளிச்'சிடச் செய்திடின்
இல்லையாம் சொல்லில் இடர்.

'பளிச்'சிடாப் பல்லும் பறிக்கா நகமும்
பழிச்சுமை மாணவர் பாங்கு.

## படிப்பில் பயன்.

*விடியல் இருமணி, அந்தி அதுவாய்ப்*
*படிப்பின் விளையும் பயன்.*

*ஐயம், பிழைகள் அகற்றுது கற்பது*
**செய்யிற் களைநோய் செறிப்பு.*

* செய் – வயல்.

## குளியல் நலன்.

*காலைக் குளியல் கவினும், நலனுமாம்;*
*மாலைக் குளியல் மயக்கு.*

*குளித்து வரின்அயர், கொட்டாவி, சோம்பல்,*
*இளித்துச் சொறியல் இலை.*

## எழில்பெறச் சீவல்.

*எண்ணெய் தடவி எழில்பெறச் சீவிடின்*
*எண்ணமும் எய்தும் எழில்.*

*ஒட்டடைக் கம்பதை ஒக்குமே, எண்ணெயைத்*
*தொட்டிட்டுச் சீவாத் தலை.*

## உடையில் ஒழுங்கு.

*அழுக்கிலா ஆடை, அழுக்கா றிலாமை*
*இழுக்கிலா மாணவர்க் கின்பு.*

*பொத்தான் பொருத்திடாச் சட்டை அணிதலின்*
*கத்தரித்து வீசல் கவின்.*

## நிமிர்ந்த நடை.

*நிமிர்ந்த நடையும், நிகழ்கணீர்ச் சொல்லும்*
*திமிர்ந்ததே மாணவத் தீர்வு.*

*நடையதில் ஏறுய் எழுக; நயமே*
*அடைய மொழிதல் அழகு !*

## நேரந்தவரு நெறி.

*நேரந் தவரு நெறிகொளும் மாணவன்*
*சீரொடு கொள்வன் சிறப்பு.*

*பணிக்குமுன் நிற்றல், பழிக்குப்பின் நிற்றல்,*
*மணிக்குநேர் நிற்றல் மகிழ் !*

## உணர்ச்சி நிற்கை.

*நிற்க உணர்ச்சிக் குறி[!]யென; நில்லற்க*
*அற்கும் விஞக்குறி[?] ஆங்கு !*

*காலே வளைத்துக் கழுத்தை நெளித்துதீப்*
**பீழையாய் நிற்றல் பிழை.*

* பீழை – பெரும் இழிவு.

## அமரும் அழகு.

கன்னத்தில் கையைக் கவைக்கும் பெளவூன்றின்
குன்றி முதுகடையும் கூன்.

அமர்தல் எனுஞ்சொல் விரும்பல் பொருளாம்;
அமர்தலில் அஃதையுண் டாக்கு!

## சொல்லில் தெளிவு.

தொடங்கிய சொல்லைத் தொடர்ந்து தெளிவாய்
முடங்குதல் இன்றி முடி!

சொல்லின் இறுதி எழுத்தைத் தெளிவொடு
சொல்லான் படிப்பது சோர்வு.

## நற் பழக்கம்.

கொடுத்திட வாங்கிடக் கொள்கை வலக்கை;
இடக்கை எடுத்தல் இழுக்கு.

நினைவில் தெளிவும், மொழியில் பணிவும்,
வினையில் துணிவும் விளக்கு!

கோவை. இளஞ்சேரன்

## தீப் பழக்கம்.

*நகத்தைக் கடித்தல் நகைப்புக் குரித்தாம்*
*நகத்தின் அழுக்கொரு நஞ்சு.*

*முகத்தைச் சுளித்தல் முதுமைக் கழைப்பாம்*
*முகத்தில் மலர்ச்சி முகிழ் !*

## பசி போக்கல்.

*பசியொடு மாணவன் பள்ளியில் சோரப்*
*'புசியேன்' எனநீ புகல் !*

*கொடுத்துப் பழகல் கொடிதோ; பசியைக்*
*கெடுத்துப் பயிற்றல் கடன்.*

## உடல் நலம்.

*வியர்வை சிதற விளையாட் டெடுத்தல்*
*அயர்வை அழிக்கும் அறி.*

*குளித்தற்குத் தண்ணீர், குடித்தற்கு வெந்நீர்*
*களித்தற்கு வித்தாகும் காண் !*

## பள்ளி ஒழுங்கு.

*ஒருநா ளதுவும் ஒருவாது பள்ளி*
*வருகைப் பதிவை வழங்கு!*

*பள்ளிக் கெனவொரு பாங்குடைச் சீருடை*
*கொள்க உளங்களி கூர்ந்து!*

## காலைக் கழுவுக!

*காலைக் கழுவிநீர் காயுமுன் உண்ணுதல்*
*நூலைப் பயில்வார்க்கு நோன்பு.*

*காலைக் கழுவிநீர் காய்ந்து படுத்திடல்*
*வாலைக் குமரர் வனப்பு.*

## அணியும், தூணும்.

*தூய்மை, தெளிவு, மொழிப்பற்றே, ஒப்புரவோ*
*டாம்நான்கு கல்விக் கணி.*

*ஒழுங்கு, பயிற்சி, உடலோம்பல், நுண்மை*
*துளங்குகல் விக்குநாற் றூண்.*

## முழக்கம்.

*நாடும், மொழியும் நமதிரு கண்களாம்;*
*ஏடும், பயில்வும் எழில்.*

*''ஒன்ருய்ப் படிப்போம்; ஒருங்கே படிக்குவம்;*
*நன்ருய்ப் படிப்போம்'' நவில் !*

[குறள் வெண்பாக்கள்.]

# பொது இயல்



கோவை. இளஞ்சேரன்
**கவிதைகள்.**



பொது இயல்

## புதை பொருள்:

★

கசக்கும் காலை.

இனிக்கும் இரவு.

வந்தாள்; போனாள்.

கையிலொரு தாலியுடன்
வருவேன் கண்ணே!

பொன் வண்டு.

வானம்பாடி.

மறைந்தோ போவாய்?

கதை இனித்தது;
செயல் புளித்தது.

மந்தைக் கரையிலே.

+

கவிதைக் குமரி.

பொருளியல் வல்லுநர்
***டாக்டர். பா. நடராசன் அவர்கள்***
M. A., D. Litt., M. L. A.,
வழங்கிய
**மதிப்புக் கருத்துரை:**

கவிதை இனிது; கருத்து நிறைந்தது; காலத்தை நிழலிடுவது. ஓய்வற்ற உழைப்பாளர் காலை வரக் கண்டு ஏங்கும் துன்ப நிலையைச் சொல்வது.
"இன்றும் வருவது கொல்லோ, நெருநலுங்
கொன்றது போலு நிரப்பு" - என்ற குறளை நினைப்பூட்டுவதாயுள்ளது. 'இரவு தேன்கூடு; உழைப்பாளர் தேனீ; காலை அது கலைக்கும் குரங்கு' என வரும் உவமைகளில் கவிதையின் புதுமணம் வீசுகிறது.

[ஒ-ம்.] பா. நடராஜன்.

# கசக்கும் காலை.

*மரங்களுக்கு வேர்போலுந் தொழிலாளர்*
*மன்பதைக்கே உழைத்து ழைத்தும்*
*உரங்காணார், உழன்றிடுவார்; அவர்க்கெல்லாம்*
*உறக்கந்தான் ஓய்வு நேரம்.*
*உறங்கவரும் இரவவர்க்குத் தேன்கூடாம்;*
*அவர்ஈயாம்; அதைக் கலைக்கக்*
*குரங்கெனவே வருங்காலை கனியெனினும்,*
*குமட்டல்தருங் கசப்பே யன்றோ ?*

சீர்திருத்தச் செம்மல்களுஞ் சிந்தனைகொள்
சிற்பிகளும் உறங்கு கையில்
'ஊர்திருத்த விழிப்பீ'ரென் றெழுப்புகின்ற
காலைப்போ துயர்வென் றாலும்,
பேர்நிறுத்தும் வஞ்சகத்தைப் பொதியவைத்துப்
படுத்திருப்போர் சுரண்ட லுக்கு
வேர்நிறுத்த வருங்காலை விழாவெனினும்
வேம்புதருங் கசப்பே யன்றோ?

இரவுக்கு வாழ்த்தெடுத்து, நிலவுதனக்
கழைப்பனுப்பி உயிரன் னளின்
வரவுக்குப் பரிசளித்தே இன்பமதை
வளர்க்குங்கால் அதைந சுக்கப்
பரவுகின்ற கதிர்கண்டு பரபரப்பாய்,
"போறே"னென் றவள்ந டக்க,
அரவெனவே வருங்காலை அழகெனினும்
வாந்திதருங் கசப்பே யன்றோ?

[அறுசீர் ஆசிரிய
விருத்தங்கள்.]

**திரு. முருகு. சுப்பிரமணியன்**

[ஆசிரியர், "தமிழ் நேசன்," கோலாலம்பூர்.]

அவர்கள் வழங்கிய

**மதிப்புக் கருத்துரை:**

புரட்சிக் கவிஞர் பாரதிதாசனாரின் கவிதை வளம் கோவை. இளஞ்சேரனிடம் முகிழ்க்கக் காண்கிறேன்; நறுக்குத் தெறித்தாற் போன்ற தமிழ்ச்சொற்கள் 'இனிக்கும் இரவை' நம்முன் படம் பிடிக்கும் பாங்கே இளஞ்சேரன் கவி வளத்திற்கு நற்சான்று.

[ஒ-ம்.] முருகு. சுப்பிரமணியன்.

# இனிக்கும் இரவு.

*வரிக்காட்டுப் புலிஉறுமும்; கருங்கோட்டான்*
*வசைபாடும்; அலறும் ஆந்தை;*
*நரிக்கூட்டம் ஊளையிடும்; நச்சரவம்*
*வெளிக்கிளம்பும் இரவென்றாலும்,*
*'சரி'க்கட்டி வாராத கூலிவாங்கச்*
*சழக்கர்க்குப் பகலி லெல்லாம்*
*தறிக்கட்டை போலுழைத்தார் தலைசாய்க்கும்*
*இரவென்றால் இனித்தி டாதோ?*

கோவை. இளஞ்சேரன்

பணம்விரிக்கக் கடைவிரித்துப் பகல்முழுதும்
பொய்விரித்துச் சுரண்டு கின்ற
குணம்விரிந்த முதல்விரிந்தார் பாய்விரித்துத்
துயில்விரிக்கும் இரவென் றாலும்,
தணல்விரிந்த தெனஅல்லி இதழ்விரிக்க,
முல்லைதன் முகைவி ரித்து
மணம்விரிக்க, முழுநிலாதன் கதிர்விரிக்கும்
இரவென்றால் இனித்தி டாதோ?

அறிவுதரும் படிப்பின்றி அன்பர்களின்
பேச்சின்றி உணவு மின்றிச்
செறிவுதருங் கலையின்றிச் செழிப்பான
செயலின்றிப் பயனு மின்றி
வறிதெனவே கழிகின்ற இரவெனினும்
"பாலாறிப் போகு" தென்னுங்
குறிகாட்டி அறைக்குள்ளே அவளழைக்கும்
இரவென்றால் இனித்தி டாதோ?

[அறுசீர் ஆசிரிய
விருத்தங்கள்.]

பேராசிரியர்.

**கா. அப்துல் காதிர்** M.A., B.T.,

[ஆசிரியர் கல்லூரி, சைதாப்பேட்டை, சென்னை.]

அவர்கள் வழங்கிய

**மதிப்புக் கருத்துரை :**

கவிதைக்குக் கருத்தும் வேண்டும்; திருந்திய வடிவும் வேண்டும்; கற்பனையும் வேண்டும்; காதிற்கினிய ஓசையும் வேண்டும்; சொல்லணி பொருளணிகளும் வேண்டும். இவை யெல்லாங் கூடிச் சுதிகூட்டும் திறத்தைக் கீழ்வரும் கவிதையிற் கண்டு களி கூரலாம்.

[ஒ-ம்.] கா. அப்துல் காதிர்.

# * வந்தாள் - போனாள்.

*தடையாய்க் கற்கள் தகர்ப்பது தடுக்க*
*உடையாய்க் காலிற் செருப்பை அணிந்து,*
*நடையில் ஏறென நவில்வதற் கமையப்*
*படைநடை பயின்று பெயர்ந்தேன் வீடே.*

---

★ நடைவழியில் ஒரு பொற்காசு கிடைத்தது; தடம் தெரியாமல் கைதவறியது. அந்நிகழ்ச்சியே "வந்தாள் – போனாள்" ஆயிற்று.

தெள்ளத் தெளிநீர் தெறியலைப் படுதல்போல்,
உள்ளம் எண்ண உலகில் உருண்டிட,
மெல்லவே நடந்தேன்; மெருகமை ஒலியில்
கள்ளக் குரலொன்று ''காதலா'' என்றதே.

சுற்று முற்றுஞ் சுழற்றினேன் கண்களை;
'சற்றே நில்'லெனும் மற்றுமோர் மொழியால்
உற்று நோக்கினேன்; உணர்ந்தேன் யாரும்
பற்றுவார் இலாதொரு பாவை கிடந்தாள்.

கொள்ளை கொள்ளும் கனிமுக ஒளியும்,
தெள்ளித் தீட்டிய தளிருடல் சூழ்ந்த
கள்ளிலாப் பொன்மலர் மாலையின் அழகும்
அள்ளி விழுங்கினேன்; அயர்ந்தேன் மயங்கியே!

'கல்வி யெலாமென் காலடி நிற்கும்;
நல்விழா பலவும் நடக்கச் செய்வேன்;
பல்வகை இன்பமும் பயப்பேன் உனக்கே;
'செல்வி'யென் பெய'ரெனச் செப்பிப் பின்னுமே,

"தக்கதோர் காலம் தகையாய், காதலிற்
சொக்கினேன் அணைப்பாய் சொத்தே" என்றான்
அக்கம் பக்கம் அகல விழித்தபின்
'பக்'கென அணைத்தேன் மைக்கண் ணிலாளையே.

மண்ணிற் கிடந்த மங்காச் செல்வியைக்
கண்ணில் ஒற்றிக் கட்டிமுத் தங்கள்
எண்ணி யொருபத் திட்டும் கைகளால்
நண்ணி அணைக்கவே நடந்தோ மிருவரே.

சண்டையு மில்லை; சழக்கு மில்லை
தண்டையின் ஒலியாள் தமியளாய், மாயமாய்
மண்டியே விட்டாள் மருவிய வழியே;
கொண்டேன் துயர்நிலை கரைமீ னெனவே.

"பிரியும் வழக்கம் எனக்கிலை" என்றாள்
தெரியாது போனேன் 'குடிவழக்க' மென்றே
உரிய குடிப்பெயர் 'செல்வம்' என்றாள்
திரிபொருள் முன்னின்பத் திளைப்பால் காணனே.

கோவை. இளஞ்சேரன்

தட்டிப் பார்த்தேன் தமிழ்யாழ் இசைத்தது;
'மட்டச் செப்பென மதித்தடித் தே'னென
வட்ட ஞாயிற்றின் வடிவினை உடையாள்
விட்டனள் 'கம்பி' ஒண்சக் கரம்போல்,

பொன்னை உருக்கிப் பொதித்த உடலினாள்;
மின்னை எழுத்தாய்ப் பொறித்தணி பூண்டாள்;
தன்னைப் 'பொற்கா' செனவுங் கூறினாள்;
என்னை மயக்கி ஏகிய வஞ்சியைக்,

கண்டா லன்பரீர், கடைக்கண் விடாது
கொண்டுவந் தென்பால் கொடுப்பீர்; அன்றிக்
கண்டதுங் காதலால் கட்டி யணைப்பிரேல்,
விண்டவென் நிலையில்நீர் வீழ்வது திண்ணமே!

[கலி விருத்தங்கள்.]

நாவலர்
இரா. நெடுஞ்செழியன் M. A., M. L. A.
அவர்கள் வழங்கிய
மதிப்புக் கருத்துரை :

அரிய, இனிய, எளிய, சிறந்த கவிதைகளைப் பொழிவதில் வல்லவர் கோவை. இளஞ்சேரன் அவர்கள் ஆவர் என்பதை நாடு நன்கு அறியும். அவருடைய கவிதைகளில் கவர்ச்சி உண்டு; சுவை உண்டு; இன்பம் உண்டு. இக்கவிதையிலே வரும் தலைவன்-தலைவியின் உரையாடலிலே காதல் காலூன்றிக் கொஞ்சி விளையாடுவதையும் மொழிக்கருத்து மிளிர்வதையும் காணலாம். வாழ்க கவிதையுள்ளம் !

[ஒ-ம்.] இரா. நெடுஞ்செழியன்.

# கையிலொரு தாலியுடன் வருவேன் கண்ணே !

தலைவன் :

வெப்பத்தால் நலிந்தவனை விலக்கி விட்ட
விரைமலர்த்தீம் பொய்கையதைக் கண்டே னில்லை;
குப்பியதோர் பசிகொண்டோன் கலங்கி நிற்கக்
கனிமரந்தான் தடுத்ததெனக் கேட்டே னில்லை;
"தப்பத்தான் நம்மணத்தைத் தள்ளி வைத்தல்;
தவிக்கின்றேன் அறியீரோ" என்ற நீயே
ஒப்பத்தான் மறுக்கின்றாய் மணத்திற் கின்றே;
ஒண்டொடியே, தடையென்ன கண்டாய் கண்ணே !

தலைவி :

*அத்தானே! அன்பூறுந் தமிழத் தேனே!*
*"அடுக்காது சாதிவிட்டுச் சாதி போதல்;*
*செத்திடவா; வாழ்ந்திடவா" என்றாள் அன்னை.*
*"செத்திடுபோ" எனச்சொல்லித் தடைநீக் கிட்டேன்;*
*"சொத்தில்லை, அப்பனில்லை" என்றார் தந்தை;*
*சொத்தையுங்கள் பேச்சென்று சொல்லி வைத்தேன்;*
*இத்துணைக்கும் மேலாக என்தாய் மாமன்*
*எதிர்த்துவந்தார்; எடுத்தெறிந்தே ஏசி விட்டேன்.*

தலைவன் :

*தடையென்ன இனிக்கண்ணே? தளர்ச்சி யென்னே?*

தலைவி :

*தமிழ்த்தாயின் முகங்கண்டேன், தளர்ந்து போனேன்.*
*படைபடையாய் வடபுலத்தார் பலமு னையில்*
*பயிரழிக்கும் விட்டிலெனும் பழுதார் இந்தி*
*நடைமுறையில் திணிக்கின்றார், நலிவே செய்வார்.*
*நந்தமிழ்த்தாய் தாழ்ச்சியொடு நறுந்த மிழ்நர்*
*அடைந்துள்ள பெருந்தாழ்வை அகற்று முன்னர்*
*அத்தானே, நமக்குமொரு 'திருவாழ்' வுண்டோ?*

தலைவன் :

*அப்படியா! அதுசரியே; அறிவு கெட்டேன்,*
*ஆரணங்கே! தமிழ்க்குலத்துக் காவற் பெண்டே!*
*இப்படியோ சூடுதந்தாய்? இனித்தாழ்க் கேன்யான்.*
*இன்றமிழ்க்கே இந்திதன்னால் இடுக்கண் சூழும்*
*செப்பிடுவித் தைக்காரர் செயல்தூ ளாக்கிச்*
*செந்தமிழ்நாட் டினில்நுழைந்த இந்தி தன்னைக்*
*கைப்பிடியாய்ப் பிடித்துடனே அனுப்பி விட்டுக்*
*கையிலொரு தாலியுடன் வருவேன் கண்ணே.*

[உரையாடல் துறையிலமைந்த
எண்சீர் ஆசிரிய விருத்தங்கள்.]

சிந்தனைச் செல்வர்
**தி. கே. சீனிவாசன் அவர்கள்**
வழங்கிய
**மதிப்புக் கருத்துரை :**

உலகம் தனக்குப் பயன்படவேண்டும்; உலகத்துக்குத் தான் பயன்படவேண்டும் என்று இரு பிரிவினர் உலகில் உளர். முதற் பிரிவினரின் நிலை வடித்தெடுக்கப்பட்டது தான் நண்பரும் கவிஞருமான இளஞ்சேரனின் இந்த அரிய படைப்பு. 'சொல்லும் மதிப்புறவேண்டும்; செயலும் தம்மைச் சீரழித்துவிடக்கூடாது' என்ற கருத்தில் இயங்கும் இப்பிறவிகளைப்பற்றி 'பொன்றிடும் அவை நிலை மறந்து தம்மகிழ்ச்சியே மாந்தும் மாந்தரே' என்று பொன்வண்டு பாடிப்பறப்பதை உலகுக்குக் காட்டிக் கண்களைத் திறக்கிறார்.

[ஒ-ம்.] தி. கே. சீனிவாசன்.

# பொன் வண்டு.

*''பொன்வண்டோ பொன்வண்டு! பிடியரிசிக்*
*கொருவண்டு;*
*பொன்வண்டோ, பெண்வண்''டென் றொருமுதியோன்*
*விலைகூறி,*
*மண்வண்டி இழுத்தோடி மழலைதருஞ் சிறார்குழுவின்*

*'பின்வந்து நின்றபடி பிடியரிசி கொடு'வென்றான்*
[தரவு கொச்சகம்]

*குடுகுடென ஓடிவந்து,*
*கொடுங்கைநிறை அரிசிதந்து நின்று,*
*''கொடுகொ''டென ஒருவண்டைக்*
*கொண்டிட்ட ஒருதம்பி, வண்டைத்*

''தொடுதொடுபோ வானத்தைத்
தொட்டுவிட்டு வா''வென்றே நூலை,
விடுவிடென விட்டுயர்த்தி
விண்ணைவென்ற சிரிப்பெடுத்து நின்றான்.

[நெடிலடி ஆசிரிய
விருத்தங்கள். ]

அண்ணன் அப்போ தங்கே வந்தோன், தம்பியிடம்
''என்னே உன்றன் இன்பம் எண்ணி வண்டதனைக்
கொன்னே கொல்வாய்; கூடா தேடா, விடு''வென்றான்;
பின்னோன் மீற, முன்னோன் இல்லம் புகுந்தனனே.

[கலித்துறை.]

வீட்டினுள் தந்தை
விளைத்த சினத்தை வெடிக்கவிட்டுக்
''கேட்டியோ, தங்கை
கெடுநிலை; கேடன் எவனுடனோ
நீட்டினள் கம்பி;
நிறைபழி பெற்றேன்; தமிழ்பயின்றேன்;
ஊட்டினை கன்றே
உதைத்தென ஆயினன்'' என்றனரே.

[கட்டளைக்
கலித்துறை.]

"ஒப்பிய காதலர் ஒழுக்கத்தை, பெற்ருேர்
தப்பெனில், மணப்பவர் தழுவியே மறைவதை,
அப்பா! அகப்பொருள் இலக்கண, இலக்கியம்
செப்புமே உடன்போக் கெனப்பேர்; தங்கையும்
அப்படிப் போயினள்; அப்பா,நாம் தேடிப்போய்க்
கைப்பிடியாய்க் கொடுவந்து கடிமணம் புணர்ப்பதில்
தப்பிலே; தமிழ்ப்போக்கு தான்."

[வெண்டுறை.]

"ஒட்டுங்கள் அப்பா ஒளிர்சினம்" எனச்சொலி அன்ஞேன்
கூட்டியே சென்ற குமரன் எவ"னென்ருன்; தந்தை;
"கூட்டியே சென்ற குமரன் எவனென்று
கேட்டியேல் மறுப்பாய்; கீழ்வீட்டுக் குமர"னென் ருரே.

[ஆசிரியத்துறை.]

"குமரனவனு? குறும்பனவனே!
கமழுமெனது கருத்தெதிர்ப்பவன்;
சமநிலேயதே சமுகமென்பனே!
உமிழ்வதன்றிநான் உதவவொண்ணுமோ?

[வஞ்சித்துறை.]

என்றுமேலுமே "இன்றிரவிலே பொழுதுபோக்கிடும்
மன்றமொன்றிலே' கருத்துமாறுளோர் மதித்துவாழ்த'லென்
றென்றுபற்றிய சொற்பொழிவதற் கொப்பிவந்தனன்;
சென்றுவருவனென்" என்றுபோயினன்; சிறியதம்பியோ,
முன்றில்நின்றுபொன் வண்டுதந்தவெண் முட்டையொன்றினை
நின்றுவீசினன்; நிவந்துபந்தென நீடுபாய்ந்ததே!
"பொன்றுபறவிநீ, பொழுதுபோக்கவே பொன்வண்டது
மென்றுதின்னவே மெல்லிலைகொடுத் தேந்திவந்ததன்
துன்றுவாழ்வதைப் பந்துமாடினாய்" என்றதட்டினன்;
அவ்வழி,
அலறியே தம்பி அழுதனன்
உலறிய வண்டதே உயர்ந்து பறந்ததே.

[சிந்தடி வஞ்சிப்பா.]

பறந்தபொன் வண்டது பாடிய பாட்டிது:
'சிறந்தசெந் தமிழதைச் சீரிய கொள்கையைப்
புரந்தரல் போல்குவர்; பொன்றிடும் அவைநிலை
மறந்துதம் மகிழ்ச்சியே மாந்தும் மாந்தரே'

[கலி விருத்தம்.]

கோவை. இளஞ்சேரன்

**திரு. தமிழ்வாணன் அவர்கள்**

[ஆசிரியர், 'கல்கண்டு', சென்னை.]

வழங்கிய

**மதிப்புக் கருத்துரை:**

இலக்கணப் பிழை இல்லாத இக் கவிதையைப் பற்றிய என் கருத்தைக் கேட்டது, என் பேறு. ஆழ்ந்த கருத்தை எளிதாக எடுத்துச் சொல்லுவது எளிதன்று; பெரிய ஆற்றல். இந்த ஆற்றலை 'வானம்பாடி' என்ற இக் கவிதையிலே நான் காண்கிறேன். ஒருமுறை படித்தாலே மனதில் நிற்கிறது.

[ஒ-ம்.] தமிழ்வாணன்.

# வானம்பாடி.

*பக்குவக் கண்களை நீட்டி - எழிற்*
*பாட்டின் அலைகளை ஓட்டி,*
*திக்கெல்லாம் யாரையோ தேடி - உடல்*
*திரிகின்ற வானம் பாடி!*
*கொக்கென வாழ்பல பேரில் - உனைக்*
*கொத்திய காதலர் யாரில்*
*சொக்கிப் பறக்கின்றாய் துள்ளி? - அதைச்*
*சொல்லிப் பறந்திடு கள்ளி!*

பூவையர் குரலில் கூடி - இசை
பூணுகின் றவானம் பாடி!
பாவை,நீ வானத்தை நோக்கி - ஒன்று
பாடலில் லையது பாக்கி:
தேவைக் குழைத்திடும் தோழர், - உடல்
தேம்புகின் றதிரு வாளர்,
சேவைக் குயர்வினைப் பாட்டாய் - வாழும்
செல்வர் திருமுன்னர் நீட்டாய்!

மக்கள் விழி,உடல் பட்டு - மலை
மண்ணில் இணைந்ததால் கெட்டுத்
தொக்கநீர் உண்ணுது தள்ளி - வானம்
தூவிடும் முத்தென உள்ளி,
நக்க முழுமதி உருகி - வழி
நற்றுளி அமுதெனப் பருகி,
சொக்கு குரலடைந் தாயே - இணை
சொல்ல வழியடைத் தாயே!

கொல்லி மலைச்சேரத் தாவி, - உயிர்
கொல்லும் இசையினில் கூவி,
செல்லும் வழியினில் தோற்பாய்; - ஒரு
செல்வி குரலுக்கு வேர்ப்பாய்!
கெல்லியென் உயிரில் பாதி - வாரிக்
கொண்டவள் அவளென் தாதி
மெல்லியல் தனக்குச் சேதி - இசை
மெருகொடு சொல்லிப் போதி!

“சென்றவர் மீள்திசை நோக்கி - உயிர்
செல்வதை ஈர்த்துநான் தேக்கிப்
பொன்றிடும் வாயினில் உள்ளேன் - துணைப்
பேடையே, கண்டாயோ; விள்ளாய்?”
என்றுனைக் கேட்பது முறுதி - அவட்
கிதனைச் சொல்லிது மிறுதி:
‘தென்றமிழ் யாவினும் ஆளும்; - அவள்
தெள்ளுடற் கென்னின்பம் மீளும்’.

[அடிதோறும் இடையே ஓரசைக்கூன்
பெற்ற அறுசீர் விருத்தச் சந்தப் பாட்டு.]

பேராசிரியர்

***கோ. சுப்பிரமணியனார்*** M. A., B. L.
[ஆராய்ச்சித் துறைத்தலைவர்,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.]

வழங்கிய

**மதிப்புக் கருத்துரை :**

வளஞ்சேரும் விண்ணிலே பிறந்தமதி
மறைவதுண்டு; வண்டமிழான் வளர்கோவை
இளஞ்சேரன் எண்ணிலே பிறந்தமதி
எந்நாளும் மறைவதிலை; இன்கனியாய்
உளஞ்சேரும் போதெல்லாம் உதவிவந்து
ஊட்டமுற உவகை யூட்டும்;
பழஞ்சோற்றை யுண்ணுகினும் பக்கத்தில்
அப்பளமாய் இப்பழமும் படைக்கும்பாரே !

[ஒ-ம்.] கோ. சுப்பிரமணியம்.

# மறைந்தோ போவாய் ?

*'முழுநிலவே; விண்ணகத்துத் தங்கத் தட்டே;*
*முதிர்காதற் குமரியவள் முகத்திற் பூக்கும்*
*எழிலுருவே' என்றுன்னைக் கவிஞர் பாடும்*
*ஏற்றங்கேட் டதற்கலர்ந்த முழுநி லாவே !*
*'எழுதரிய விண்ணகமோர் எண்ணெய்ச் சட்டி;*
*எழும்முகிலோ நுரையாகும்; அதிலே நீயோ*
*சுழிகின்ற அப்பளமாய்ச் சுழல்வாய்' என்றால்*
*சுடப்பட்ட மலரெனவே சுருண்டோ போவாய் ?*

'அன்றொருநாள் அவளுதட்டில் முத்தம் பாய்ச்ச
அணைத்தவுடன் குனிந்ததலை நிமிர்த்தத் தொட்ட
மென்முகவாய் விளிம்புருவே' என்றே காதல்
மேவியவர் சொற்கலர்ந்த அரைநி லாவே!
'சின்னவொரு பொடியனவன் தின்னக் கொண்ட
சிதலெடுத்த நாரத்தஞ் சுளைநீ' என்றால்
கன்றிப்போய் உடல்தேயக் கருகித் தீய்ந்து
கருங்காரின் வாய்ப்பட்டுக் கவிழ்ந்தோ போவாய்?

'பிறைநிலவே; பிரித்தெடுத்த உதடே போல்வாய்!
பிஞ்சுடல்கொள் எழுதமொழிப் பசுங்கு ழந்தை
நிறைநுதலின் உருவுடையோய்' என்றே பல்லோர்
நிற்புகழ அதற்கலர்ந்த நிலாப் பிறையே!
'குறைவுற்றுத் தேய்ந்திட்ட இலாடம் நீயே;
குப்பையிலே கிள்ளியெறி நகமே போல்வாய்;
உறையெடுத்த சிறுவாளே' என்றே உன்னை
உரைத்திட்டால் உடலழிந்து மறைந்தோ போவாய்?

[எண்சீர் ஆசிரிய
விருத்தங்கள்.]

திருக்குறள்
*வீ. முனிசாமி* B.A., B.L. *அவர்கள்*
வழங்கிய

**மதிப்புக் கருத்துரை:**

கவிஞர் கோவை. இளஞ்சேரனார் உலக அனுபவம் நிறைந்தவர்; புலவர் வரிசையில் தனிச்சிறப்புக் குரியவர். அவரது "கதை இனித்தது; செயல் புளித்தது" எனும் கவிதைகளை ஆர்வத்துடன் பன்முறை படித்தேன்; பாடிப் படித்தேன். நகைச் சுவை போலக் காட்டி, நல்ல உண்மைகளை இடித்துக் காட்டுகிறார்.

[ஒ-ம்.] வீ. முனிசாமி.

# கதை இனித்தது; செயல் புளித்தது.

*வேதமொ டுகுறள் ஓதிய வர்நல்ல*
*வேங்கடய் யர்குறட் பாங்கினையே*
*ஆதிமு தற்பொருள் சேதியெல் லாமறி*
*வாற்றலு டன்னுரை சாற்றிவந்தார்;*
*வீதியி னர்பள்ளுச் சேரியி னர்,அயில்*
*கண்ணினர், காளையர் நண்ணிவந்தே*
*காதிடுங் கூட்டத்திற் கண்ணிட்டு நின்றனன்,*
*'கண்ண'னெ னுமையர் 'சின்ன'மகன்.*

வெட்டுங் கருவிழி, கொட்டு மழகுநல்
வள்ளியெ னும்பண் ணைப் பள்ளிதரும்
மொட்டெனும் பார்வையைச் 'சட்'டெனக் கண்டனன்
மெல்லக்கு றிகாட்டிக் கொல்லைபுக்கான்.
சிட்டுப்ப றப்பெனக் குட்டிய வள்ளிதழ்
சிந்துஞ் சிரிப்புடன் வந்துநின்றாள்;
தொட்டனன் தீட்டொன்றுஞ் சுட்டதில் லையவள்
தொத்தினள் தோளினில்; முத்தமிட்டான்.

சித்திரைத் திங்களில் நத்திய தாமிந்தச்
'சின்ன'வி ளையாடல் வண்ணமுற்றே
முத்தனை யாளிடம் வித்தும்மு ளைக்கநல்
மேனி பசந்தனள் ஆனியிலே.
"கொத்திய தென்னடி தொத்துநோய்" என்றப்பன்
கொக்கரித் தான்வள்ளி கக்கிவிட்டாள்;
கத்தியும், கன்னியும் ஒத்தெடுத் தேகுறள்
சுற்றவர் தம்மையே பற்றவந்தான்.

தெள்ளுகு றளய்யர் சொல்லிநின் ருர்கதை:
 "தென்புலைச் சாதியாள் ஆதியென்பாள்
வள்ளுவ ரையுயர் பார்ப்புப் பகவற்கே
 வார்த்தன" ரென்றனர்; ஆர்த்துவந்தோன்:
வள்ளியென் றன்பறைப் புள்ளிமா னும்முயர்
 வர்க்கத்துக் கண்ணனுஞ் சொக்கியதால்,
வள்ளுவர் வயிற்றில் பள்ளிகொண் டாரிதை
 வாழ்த்துவீர் மன்றுளீர் வாழ்த்தி"ரென்ருன்

பதைப தைத்துள்ளஞ் சிதைவுற் றேஐயர்
 பார்த்தனர் மன்றினை வேர்த்துவிட்டார்;
"விதைத்த வித்தினைப் புதைத்தி டே"லென்று
 வள்ளியுஞ் சொல்லினை அள்ளிவிட்டாள்;
"இதைம னுநீதி ஏற்கா"தென் ருர்"கத்தி
 ஏற்கவைக் கும்"மென்ருன்: ஏற்றுவிட்டார்.
கதைஇ னித்ததுஞ் செயல்பு ளித்ததுங்
 கத்திமு னைமுன்னர் செத்தனவே !

[கும்மிச் சந்தம் அமைந்த
எழுசீர் ஆசிரிய விருத்தங்கள்.]

கோவை. இளஞ்சேரன்

செந்தமிழ்க்காவலர்
*டாக்டர். அ. சிதம்பரநாதனுர்*
M. A., Ph. D., M. L. C.
[தலைமைப் பேராசிரியர், ஆங்கில-தமிழ்
அகராதித்துறை, சென்னைப் பல்கலைக் கழகம்.]
வழங்கிய
**மதிப்புக் கருத்துரை :**

மாந்தர் சொல்லாலும், செயலாலும் வேருவர் என்பதனையும், கவிஞர் கற்பனையுலகு நடைமுறை வாழ்க்கைக்கு ஒவ்வாது என்பதனையும் கவிஞர் இக் கவிதையால் விளக்குகிருர். இக் கவிதையில் அடுத்தடுத்துப் பலவித மெய்ப்பாடுகள் செவ்விதிற் புலப்படுகின்றன.

[ஒ-ம்.] அ. சிதம்பரநாதன்.

# மந்தைக் கரையில்.

*சாணியைப் பொறுக்கிவருங் குட்டி - உன்*
*சாண்முகத்தில் ஏதுதங்கக் கட்டி ?*
*கோணியே குலுங்குமுன்றன் கன்னம் - எனைக்*
*கொல்லுதற்குக் கொண்டதுவோ எண்ணம் ?*
*வாணியை வடிக்குமிதழ் உண்ண - அடி*
*வாய்பிளந்து யானுனையே நண்ண,*
*நாணியே குனிவதேனே கண்ணே ? - உனை*
*நத்துதற் குயிர்பொறுத்தேன் பெண்ணே !*

மந்தைக் கடுத்தசிறு கொல்லை - அதில்
மாட்டுச்சாணத் திற்கெல்லையே இல்லை;
வந்ததனை நீபொறுக்கிக் கொள்வாய்; - உன்
வண்ணவுடல் நான்பதுக்கிக் கொள்வேன்;
சந்தைக் கடையிலன்று பார்த்தே - எனைச்
சக்கரத்தின் பல்லிடுக்கிற் சேர்த்தாய்;
சிந்தைக் கதைகிறுத்திக் கண்ணே - மிகச்
'சீக்கிர'மாய்த் தாண்டிவாடி பெண்ணே!

வீட்டினில் அடைந்துகிடந் திட்டால் - உனை
வீண்வம்புக்கு நானிழுக்க மாட்டேன்;
தீட்டிவிட்ட தங்கவுடல் காட்டி - நீ
தெருக்கோடி வந்துவிட்டாய் கூட்டி!
மீட்டிவிட்ட பேரியாழைப் போலே, - உன்
மேனிக்காற்றென் மேற்படிந்த தாலே,
வாட்டிவதைக் கின்றதடி குட்டி, - என்
வாட்டங்கெடுப் பாய்நீகையாற் கட்டி!

கட்டவிழா மல்லிகை அரும்பே! - உனைக்
கட்டவிழ்க்கும் வண்டெனை விரும்பாய்!
சொட்டைவிழாப் பொன்சிலையே பேடே; - உனைச்
சொக்கவைக்குந் தீயெனைநீ கூடாய்!
தொட்டுச்சுருங் காததளிர் உன்னை - விரல்
தொட்டுப்பார்க்க ஆசைகொண்ட என்னைத்
தொட்டணைக்க மேலுமினி நாணாய்! - அங்கு
தோட்டக்காற்று போகுதடி வீணாய்.

[அடிக்கிடையே கூன் அமைந்த
அறுசீர் ஆசிரியச் சந்த விருத்தங்கள்.]

ஏடெடுத்த நற்கவிஞன்
இப்படியோர் சீர்க்கவிதை
பாடியபின் அக்கவியிற்
பாகதனை - ஓடவிட்ட

தன்கைக்கு முத்தமிட்டான்;
தன்முகத்தை ஆடிதனில்
புன்னகைக்கே ஆட்படுத்திப்
பூரித்தான் - "என்னருமைச்

சொற்பாவாய்; காவியமே;
சொக்கவைக்கும் ஏருடையாய்;
நற்காதல் தீம்பொருளே''
என்றெல்லாஞ் - சொற்பெருக்கி

விம்முகின்ற உள்ளத்தில்
வெற்றிமகிழ் வேற்றுகையில்
மம்மரொடு தாழ்குரலில்
மண்டிநின்றே - ''அம்மம்ம!

அண்ணு!நான் என்னென்பேன்
ஆணவத்தை'' என்றலறிக்
கண்ணம்மா என்றதங்கை
கண்பிசைய - ''என்னம்மா!

ஏன் தங்காய் ஓலமிட்டாய்?
இன்னலெதும் நேர்ந்ததுவோ;
நான்தீர்ப்பேன் கூ''றென்றே
நாவுதிர்த்தான்; - மான்விழியாள்

நீர்நிறுத்திக் கண்களையும்
நேர்நிறுத்திச் சொல்லுதிர்த்தாள்;
வேர்க்கின்ற நெஞ்சகத்தே
வேற்கண்ணுன் - ஏற்கின்ருன்:

''மங்கைக் கரைக்கே
மறுதோன்றி கொய்கின்ற
சிந்தையொடு கைவீசிச்
சென்ற எனை, - அந்தவழி

ஆடோட்டுங் கம்போடும்.
ஆள்விழுங்குங் கண்ணேடும்
மாடெனவே என்னண்டை
மண்டிவந்து - 'வாடி'யென்றும்,

'குட்டி'யென்றும், 'காத'லென்றும்
கும்மாளப் பேச்சிட்டுத்
தொட்டிழுக்க வந்தானே
அண்ணு,நான் - விட்டகல்லாய்

பாய்ந்திங்கு சேர்ந்துன்னைப்
        பார்த்துயிர்த்தேன்'' என்றிட்டாள்
காய்ந்தவாய் மூடாமல்,
        தன்னுணர்வை - மாய்த்துநின்ற

செங்கவிஞன் வேற்கண்ணன்
        செவ்விதழ்கள் தாம்துடிக்கத்
''தீக்களங்கம் சேர்ந்தமைந்த
        தீயோர்கள் - ஊர்க்களத்தே

ஆடுகின்றார்; கன்னியர்கள்
        ஆங்குவரின் சொல்லாடல்
நாடுகின்றார்; 'குட்டி'யென்றுந்
        'தொட்டி'டென்றுங் - 'கூ'டென்றும்

வாயூறித் தாந்திரியும்
        வக்கற்ற ஆண்களிடை
நீயுலவ வேண்டா
        நிறுத்''தென்றான் - போய்விட்டாள்.

மங்கையவள் செய்தியினை
        மாற்றிவைத்து, வேற்கண்ணன்
துங்கஒளித் தன்கவிதை
        துய்க்கலுற்றான்; - அங்கவனோ

துய்க்கின்ற சொல்லெல்லாம்
        'தொட்டி'டென்றுஞ் 'சொக்கி'டென்றும்
தைக்கின்ற முள்ளதுவாய்,
        தாக்குகின்ற - கைக்குத்தாய்ப்

பேச்சமைந்த சீர்க்கவியே
        பாட்டமைத்த அன்னவனை
ஏச்சுக்கே ஆளாக்க
        ஏங்கிவிட்டான் - "சீச்சீ

கவிதை முலாப்பூச்சு
        கற்பனையாம் கானல்;
புவிதனில் பொல்லாங்கே
        பூக்கக் - குவிப்பதுவாம்."

என்றந்த நற்கவிஞன்
ஏடுகிழித் தோடவிட்டு
வென்றுவிட்ட காளையென
வீறிநின்றான். - 'நன்றறியாக்

கோழையே, செல்'லென்று
கொக்கரித்த, தூளான
தாளெல்லாங் காற்றில்
தவழ்ந்து.

[பஃறொடை
வெண்பா.]

கோவை. இளஞ்சேரன்

கவிதை ஒரு குமரி; கன்னித் தன்மை பொலியும் குமரி. கவிஞன் அக் குமரியின் அம்மையப்பன். அந்நிலை வழுவாது குமரியைப் பேணவேண்டும். பேணுபவனே கவிஞன்; பேணப்படுவதே கவிதை.

# கவிதைக் குமரி.

*செஞ்சொல்லே பஞ்சுடலாய்ச் செழும்யாப்பே*
*உயிரதுவாய்*
*அஞ்சுவையும், அருநயமும் அழகாடை*
*மேகலையாய்ப்*
*பொன்னன்ன நுண்பொருளே பெண்மைகொள்*
*கன்னிமையாய்த்*
*துன்னுஞ்சொல் பொருளணியே துளங்குகின்ற*
*அணிகலனாய்க்*
*கொஞ்சுமொழி பண்ணதுவாய்க் கொள்கவிதைப்*
*பெயர்கொண்டேன்*
*நெஞ்சமெனும் கலையரங்கில் நிலைத்தாடும்*
*குமரி,கேள் !*

*சொல்லடுக்கி வரியமைத்துச்*
*சொல்லிடுவார் நீயென்றே;*
*கல்லடுக்கும் கொத்தன்செய்*
*கலையறியார் இவர்சில்லோர்.*

உள்ளுணர்வைப் பிறமொழிகொண்
டுருச்சமைத்தே நீயென்பார்;
கள்ளுணர்வோன் நஞ்சுண்ணும்
கழிசெயல்கொள் இவர்சில்லோர்.

பழிவளர்க்கும் பொருளமைத்துப்
பக்குவமாய் நீயென்பார்;
மொழிவளர்ப்பாய் வயிறுவளர்த்
தொழிகின்ற இவர்சில்லோர்.

இவ்வணம்,
தேராத் தமிழரின் தீராச் செயலினால்
காராக் கருணைக் கிழங்கெனக் கருத்து,
வெந்த சேப்பங் கிழங்கென வெளுத்து
நொந்திடச் செய்து, நோவுற வைத்தவர்
உன்முகம் உணக்கும் உமிழ்செயல் உணர்ந்தேன்;
'என்மகன் ஆணை' என்றேன், கவினுனேன்;
கவிதைக் குமரியே, கண்ணே!
புவிதனில் உன்புகழ் புரிதலென் தொழிலே!

[நேரிசை
ஒத்தாழிசைக் கலிப்பா.]

## நன்றி :

எழுதினேன் கவிதை; எழுதுக என்றெனை
முழுதும் தூண்டிய முருகு
சுப்பிர மணியரே ! சுடச்சுடப் பொன்னியில்
அப்பொழு தப்பொழு தழகுறத் தந்தனிர்.
அவ்வழி பற்றிய
செவ்விதழ் நண்பரீர் !
கவிதையைத் தொகுத்திடக் கைகொடுத் தவர்காள் !
கவிக்கொரு மதிப்புக் கருத்துரை வழங்கிய
பேராசிரியப் பெரியீர்;
மேன்மைக் கவிஞரீர்; மேடைச் செம்மலீர்;
தேன்சேர் எழுத்துளீர்; தெவிட்டா அன்பரீர் !
யாங்ஙனம் புகழ்வேன் ஓங்குநும் பேருளம் ?
நிறைவச் சேற்றிய மறைமலை அச்சக
நலங்கொள் சாமி ! நடரா சலைவிய !
உளங்குடி கொண்டே ஒண்டமிழ் பயில்வீர் !
விழாச்செய் துயர்த்திய விழாக்குழு நண்பர்காள் !
உள்ளத் துணர்வெலாம் ஒருசொல் லாக்கி
அள்ளக் குறையா அன்பிற் குழைத்து
நன்றி நவின்றனன்; என்றும் மறவனே.

[இணைக்குறள்
ஆசிரியப்பா.]

**கோவை. இளஞ்சேரன்.**

★ முன்பு புதுக்கோட்டையிலும் தற்போது நாகையிலுமாகத் தமிழாசிரியப் பணியை மேற்கொண்டவன். நாகையில் தமிழ்ச் சங்கத்தை நிறுவி, பேணி வளர்ப்பவன்.

★ சமூக, மொழிச் சீர்திருத்தக் கொள்கையினன். பல்லோரது வாழ்வியல் விழாக்களின் தலைவன்; சிந்தித்துச் செயலாற்றுவோன்.

★ "வள்ளுவர் வாழ்த்து" என்னும் இவனது நூல் திருக்குறளுக் கமைந்த புதுமைக் கருத்தோட்டங் கொண்டது.

★ இவனை ஈன்றபொழுது பெரிதும் உவந்தேன்.

'கோவை இளஞ்சேரன் நல்லாசிரியன்; சிறந்த தமிழ்த் தொண்டன்; தமிழ் மூச்சினன்; புலமையன்; ஆற்றல் மிக்க கவிஞன்; தேர்ந்த சொற்பொழிவாளன்; பண்பொடு பழகுவோன்'

—என்று பல்லோர் கூறுவதைக் கேட்டும், எண்ணியும் இதுபோது பெரிதும் உவக்கின்றேன்.

கோ. வை. மீனாட்சியம்மாள்.

Commercial Pri

:ket Printed at
& Publishing House, Madras-1